


Registered as a Newspaper பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 316

ஞாயிற்றுக்கிழமை 08 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

### ரணில் மட்டக்களப்புக்குச் செல்லும் நிலையில்

# சிங்களவர்களின் போராட்டத்தால் தமிழர்களின் போராட்டத்துக்குத் தடை!!!

### மட்டக்களப்பில் பெரும் பதற்ற நிலைமை

**மட்டக்களப்பு, ஒக்ரோபர் 8**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டக்களப்புக்கு பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், மயிலத்த மடுவில் சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள சிங்களவர்களும், பிக்குகளும் இணைந்து நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இதன் பின்னர் மயிலத்தமடு மேய்ச்சல் தரையைக் கோரிய தமிழ்ப் பண்ணையாளர்களின் தொடர் போராட்டம் மற்றும் கவனவீர்ப்புப் போராட்டங்களுக்கு ஏறாவூர் நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.** »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

## வெளிநாட்டுப் பணம் உள்வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 8

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு அனுப்பும் பணத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. »16

## மின்கம்பி அறுந்து வீழ்ந்து பெண்ணொருவருக்கு காயம்

யாழ்ப்பாணம், ஒக். 8

வட்டுக்கோட்டை, சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள மின்சாரக் கம்பி அறுந்து விழுந்து, மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார். »15

## இஸ்ரேல் - பலஸ்தீனம் திடீரென மூண்ட போர்

காஸா, ஒக். 8

இஸ்ரேலுக்கு எதிராக திடீரென இராணுவ நடவடிக்கையை ஹமாஸ் ஆரம்பித்துள்ளது. இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 198 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். »15




யாழ்ப்பாணம், ஒக். 8

இரு தரப்பினருடனான மோதலில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

புன்னாலைக்கட்டுவனில் வெளிநாட்டிலிருந்து வந்தவருக்கும், அயலிலுள்ளவர்களுக்கும் இடையிலான பாதைப் பிரச்சினையாலேயே மோட்டார் சைக்கிள் தீவைப்புச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்பதை முதல் கட்ட விசாரணைகளில் கண்டறிந்துள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஓ-26)

## வாளுடன் ஒருவர் கைது

யாழ்., ஒக். 8

காரைநகர், களபூமியில் வாளுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத் தலைமை »15

நாடாளுமன்ற

## தேர்தல் முறைமையை மாற்ற விசேட அமைச்சரவைப் பத்திரம்

### நீதி அமைச்சரால் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஒக். 8

நாடாளுமன்றத் தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்கான அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான விசேட அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் சார்பில் நீதி மற்றும் அரசமைப்பு மறு »15

## இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் அவதானம்

கொழும்பு, ஒக். 8

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் விழிப்பாகவே இருக்க வேண்டுமென்று வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், வீடுகளுக்குள்ளேயே இருக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள் »15

## ஜனாதிபதி ரணிலின் வெளிநாட்டு பயணச் செலவுகள் மூடுமந்திரம்

### தகவல் அறியும் உரிமைச் சட்டக் கோரிக்கை ஜனாதிபதி செயலகத்தால் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் அமெரிக்காவுக்கு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகிதம் சென்றிருந்த நிலையில் இது தொடர்பான பயணச் செலவு விவரம், அதில் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற »15

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதிபதி சரவணராஜாவுக்கு அச்சுறுத்தல் உண்மையே

## வினோ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 8

**நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தப்பட்டமை முற்றிலும் உண்மையே. இது தொடர்பில் நீதிபதி தெளிவாகத் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்தார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வினோநோகராதலிங்கம் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிபதி சரவணராஜா வெளிநாட்டுக் குத்தப்பிச்சென்ற விடயம் தொடர்பில் நீங்கள் (அரச தரப்பு) ஒவ்வொரு காரணத்தைக் கூறலாம்.

ஆனால் அவர் அச்சுறுத்தலுக்கு, கொலை மிரட்டல்களுக்கு, அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் எழுத்துமூலம் அறிவித்துவிட்டுத்தான் அவர் சென்றுள்ளார். நீதிபதிகளுக்கே இந்த நிலைமை என்றால், சட்ட ஆட்சியின் நிலை குறித்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். குருந்தூர்மலை வழக்குத்தான் அவரின் கடைசி விசாரணையாக இருந்திருக்கும் என நான் நினைக்கின்றேன். அதில் என்னையும் பிரதிவாதியாக பெயரிட்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள், தமிழ் மக்கள் தான் தீர்வுக்காக வீதியில் இறங்கிப் போராடிவந்தனர். இன்று சட்டத்தரணிகளும் வீதிக்கு இறங்கிப் போராடுகின்றனர். முல்லைத்தீவு நீதிமன்றம் ஐந்து நாள்களாக மூடப்பட்டுள்ளது. அவர்களுடன் பேச்சு நடத்த இந்த அரசு தயாரில்லை. பேச்சு நடத்தி தீர்வை வழங்க அரசு ஏன் தயக்கம் காட்டுகின்றது? மூலை முடுக்கெல்லாம் போராட்டம் இடம்பெறுவதையா அரசு எதிர்பார்க்கின்றது?

அதேவேளை, ஜேர்மனி ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துகள், சிங்கள மக்கள் மத்தியில் அனுதாப ஓட்டுகளை இலக்கு வைத்ததாகும். ரணில் விக்கிரமசிங்கவை சிறுபான்மையின மக்கள் வேறு கண்ணோட்டத்தில்தான் பார்த்தனர்.

ஆனால் அவரும் ராஜபக்சக்களின் வழியில்தான் பயணிக்கின்றார். சிறுபான்மையின மக்களின் ஆதரவு தேவையில்லை என்ற தொனியில் செயற்பட்டு, சிங்கள வாக்குகளை குறிவைக்கின்றார் - என்றார். (எ-44)

# கிளிநொச்சி மாவட்ட சிறுவர்தின நிகழ்வு!

கிளிநொச்சி, ஒக். 8

சர்வதேச முதியோர்- சிறுவர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டச் செயலகமும், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக திறன்விருத்தி நிலையத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அகல்ஜா செகராஜா கலந்து கொண்டார்.

முதியோர் மற்றும் சிறுவர்களின் ஆளுமைகளை வெளிப்படுத்துகின்ற சிறுவர்களின் கவிதை மற்றும் பேச்சு, கிளிநொச்சி தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களின் கிராமியக் குழு நடனம், பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக பிரிவு முதியோர்களின் வில்லிசை, பூநகரி பிரதேசசெயலக பிரிவு முதியோர்களின் கூத்து, முதியவர்களின் தனி நிகழ்வுகள் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. விளையாட்டு மற்றும் கலைநிகழ்வு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு, கலை நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்களுக்கான பரிசளிப்பு மற்றும் கௌரவிப்பும், அதிதிகளின் உரைகளும் நடைபெற்றன. (எ-113)

# பெரமுனவின் தலைமை இளம் எம்.பி.யிடமே

## மஹிந்தவிடம் கோரிக்கை

கொழும்பு, ஒக்.8

பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைமைப்பதவியை இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் தலைவரான மஹிந்த ராஜபக்சவிடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர் என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந்த இளம் தலைமைத்துவத்தை வழிநடத்துவதற்கு சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை இணைத் தலைவராக நியமிக்கவேண்டும் என்றும், கட்சியின் ஆயுட்காலத்தலைவர் என்ற அந்தஸ்தில் இருந்து தாங்கள் செயற்படவேண்டும் எனவும் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையை மஹிந்த ஏற்றுள்ளார் என அறியமுடிகின்றது. எனினும், பெரமுனவுக்குள் தலைமைப்பதவிக்கு வருவதற்குத் தகுதியான பலர் இருப்பதால் எவருக்கும் அநீதி இழைக்கப்படாத வகையிலேயே முடிவு எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்சவை நாட்டு மக்களே ஜனாதிபதி வேட்பாளராக்கினர். அதேபோல நாட்டு மக்கள் ஏற்கும் ஒருவரையே கட்சித் தலைவராக்கவேண்டும் எனவும் மஹிந்த சுட்டிக்காட்டியுள்ளார். (எ-44)

# பொலிஸ்மா அதிபர்களுக்கு பதவியுயர்வு

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அனுமதியின் கீழ், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி பிரதிப் பொலிஸ்மா அதிபர் வருண ஜயசுந்தர, குற்றப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.வி.டி.ஏ.ஜே.கரவிட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்துக்குப் பொறுப்பாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ்.டபிள்யூ.எம்.சேனாரத்ன ஆகியோரே சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (ம)

# ஐக்கிய மக்கள் சக்தியில் சங்கமிக்கும் டலஸ் அணி

## கொழும்பு அரசியலில் திருப்புமுனை

கொழும்பு, ஒக். 8

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதற்கான பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும், தேர்தலொன்று அறிவிக்கப்பட்ட பிறகு அல்லது அதற்கு முன்னர் இவர்கள் இணையக்கூடும் எனவும் அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணியில் பங்காளியாக இணையவேண்டும் என்று டலஸ் அணிக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதற்கான பேச்சுகளும் இடம்பெற்றன. எனினும், டலஸ் அணியில் உள்ள சிலர் சஜித் கூட்டணியில் இணைவதில் இழுத்தடிப்புச் செய்துவருகின்றனர். இந்நிலையில் சில உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய முன்வந்துள்ளனர்.

அதேவேளை, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார ஆகியோர் தற்போது சஜித் அணியுடன் நெருக்கமாகச் செயற்பட்டுவருகின்றனர். (எ-44)

# கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் தமிழினம்

## அரசியல் ஆய்வாளர் யோதிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

பல்வேறு அழுத்தம், நிர்பந்தம் அச்சுறுத்தல் காரணமாக பதவி விலகிய நீதிபதி சரவணராஜா விவகாரம் அரசின் இன அழிப்பு நிகழ்ச்சி நிரலை அம்பலப்படுத்துவதற்கு தமிழ் தரப்புக்குக் கிடைத்த முக்கியமான சந்தர்ப்பம் என்று அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநருமான சி.அ.யோதிலிங்கம் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் பதவிவிலகல் பலத்த அதிர்வுகளை இலங்கையில் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் கௌரவத்தைத் தலைகீழாகப் புரட்டிய விவகாரம் என்பதால் அரசாங்கம் ஆடிப்போயுள்ளது. சுயாதீன விசாரணை ஒன்றுக்கு அரசாங்கம் தயாராக இல்லை. நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் பகிரங்கமானது. மேன்முறையீடு வழக்குகள் பகிரங்கமானவை. இவற்றையெல்லாம் சுயாதீன விசாரணை நடக்கும் போது அரசாங்கத்தால் மறைக்க முடியாது. சட்டமாஅதிபரின் அழுத்தம், பாதுகாப்புக் குறைப்பு, புலனாய்வுப் பிரிவினரின் கண்காணிப்பு என்பன தான் விசாரிக்கப்பட வேண்டிய விடயங்கள். அவற்றுக்குப் போதிய ஆதாரம் இல்லாமல் நீதிபதி சரவணராஜா அதைக் கூறியிருக்கமாட்டார்.

போர் வெற்றிக்குப்பின்னர் இந்தக் கட்டமைப்பு சார் இன அழிப்பில் படையினர் தீவிரமாக உள்ளனர். தாம் உயிரைக் கொடுத்துக் கைப்பற்றிய இடங்களை அரசியல்காரர்கள் அபகரித்துச் செல்ல முடியாது என்ற கருத்தும் அவர்களிடம் உள்ளது.

தொல்லியல் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், பௌத்தசாசன அமைச்சு, பொது நிர்வாக அமைச்சு என்பன படையினரின் செயற்திட்டங்களுக்கு உதவும் கருவிகளே. இந்த இன அழிப்பு நிகழ்ச்சி நிரலுக்கு நீதிபதி சரவணராஜா தடையாக இருக்கின்றார். நீதிபதி சரவணராஜா பதவி விலகல் தொடர்பாக தமிழ்த்தரப்பின் எதிர்வினைகள் திருப்திகரமாக இருந்தன எனக் கூறமுடியாது. தமிழ்ச் சட்டத்தரணிகள் ஒப்பீட்டு ரீதியில் சில முயற்சிகளைச் செய்துள்ளனர். புலம்பெயர்நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் பேரெழுச்சியைக் கொண்டுவந்திருக்கலாம். இரண்டு தளங்களிலும் போதிய கரிசனைகள் காட்டப்படவில்லை. வரலாறு சந்தர்ப்பங்களை எப்போதும் தருவதில்லை என்ற உண்மையை தமிழ்த்தரப்பு புரிந்து கொள்வது நல்லது என்றுள்ளது. (எ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வீடொன்று தீயிட்டு எரிப்பு மீசாலையில் வெறிச்செயல்

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ்ப்பாணம் தென்மராட்சி மீசாலை மேற்குப் பகுதியிலுள்ள வீட்டின்மீது இனம்தெரியாத நபர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் கதவை உடைத்து உள்ளே நுழைந்த இனந்தெரியாத குழுவினர் மோட்டார்சைக்கிள், தொலைக்காட்சி மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் என்பவற்றுக்கு தீயிட்டுள்ளனர்.

வீட்டில் தாய், மகள், பேரப்பிள்ளைகள் என ஐவர் இருந்துள்ளனர். எனினும் அவர்களுக்கு தெய்வாதீனமாக எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. தீ பரவுவதை அவதானித்த அயலவர்கள் அவர்களைப் பத்திரமாக மீட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாரிடம் இதுதொடர்பில் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-27)

### அதிபர்கள், ஆசிரியர்களின்

# நிலுவையை வழங்கக்கோரி போராட்டத்துக்கு அழைப்பு!

**யாழ்ப்பாணம், ஒக். 8**


**அதிபர் ஆசிரியர்களின் சம்பள நிலுவைகளை வழங்குமாறு வலியுறுத்தி கொழும்பு மத்திய கல்வி அமைச்சுக்கு முன்பாக எதிர்வரும் 24ஆம் திகதி பெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் ஆசிரியர் சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் ஜெயராஜசிங்கம் கொல்வின் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள நிலுவை தீர்க்கப்படாமல் உள்ளதால் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆசிரியர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சம்பள நிலுவை தொடர்பில் அரசாங்கத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுகளை நடத்தியபோதும் இதுவரை தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. சென்றவருடம் ஆசிரியர்களின் சம்பள நிலுவையைக்கோரி கொழும்பில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சில கோரிக்கைகளை மட்டும் அரசாங்கம் நிறைவேற்றியது. ஆனால் அதிபர் ஆசிரியர்களின் ஏனைய நிலுவைகள் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளமையால் அவற்றைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்கும் முகமாக இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல ஆசிரியர்கள் தமது பிரதேசங்களைத் தாண்டி வெளி மாவட்டங்களில் கடமையாற்றி வரும் நிலையில் அவர்களுக்கு வழங்கவேண்டிய இருபது ஆயிரம் ரூபா நிலுவையை அரசாங்கம் வழங்கவேண்டும். மாணவர்களுக்கு மானிய விலையில் கற்றல் உபகரணங்களை வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ம-27)



## கைது

யாழ்ப்பாணம், ஒக். 8

கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு வேளையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட பொலிஸார் சந்தேகத்துக்கு இடமான நிலையில் நடமாடிய மூன்று இளைஞர்களை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே அவர்களிடம் இருந்து கஞ்சா மீட்கப்பட்டது. அவர்களை சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் முயற்சிகளையும் பொலிஸார் முன்னெடுத்தனர். (ம-125)

✦ ✦ ✦

கொழும்பு, ஒக். 8

இளவாலை, பனிப்புலத்தில் வெளிநாட்டில் இருந்து சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், சந்தேகநபரிடம் இருந்து 25 சிகரெட் பெட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார். (எ-23-125)

✦ ✦ ✦

மன்னார், ஒக். 8

மன்னார் அரச மருத்துவமனையின் அம்புலன்ஸில் போதைப்பொருள் கடத்தி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட அம்புலன்ஸ் சாரதி, பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பித்த நிலையில் அவர் தமிழகத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளார். பாம்பன் குந்துகாலிப் பகுதியில் வைத்து நேற்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் அரச மருத்துவமனையின் அம்புலன்ஸில் ஐஸ் போதைப்பொருளைக் கடத்தி விற்பனை செய்த வழக்கில் கடந்த முதலாம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணையின்போது பொலிஸாரின் கட்டைவிரலைக் கடித்துவிட்டு தப்பித்துத் தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையிலேயே அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-100)

## நசீர் அஹமட் 'அவுட்' தெற்கில் பரபரப்பு!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து சுற்றாடல்துறை அமைச்சர் நசீர் அஹமட் நீக்கப்பட்டது சட்ட ரீதியானது என உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பாகியுள்ளது.

கட்சியின் முடிவையும் மீறி மாற்றுக் கட்சிகளுக்கு 'பல்டி' அடிப்பதற்குத் தயாராகிவந்தவர்களுக்கு தமது முடிவை மாற்றியமைப்பது குறித்து சிந்திக்க வேண்டியேற்பட்டுள்ளது. அத்துடன், கட்சி தாவியதால் நீதிமன்றத்தில் தற்போது வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளவர்களுக்கும், இந்தத் தீர்ப்பு அடிவயிற்றில் புளியைக்கரைத்துள்ளது என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கட்சியின் தீர்மானத்தை மீறி 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர் பதவியில் இருந்து அமைச்சர் நசீர் அஹமட் நீக்கப்பட்டார். கட்சியின் முடிவுக்கு எதிராக அமைச்சர் நசீர் அஹமட் உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த வழக்கிலேயே மேற்படி தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் அவர் இழப்பார். கடந்த தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தனது சொந்தச் சின்னமான மரத்திலேயே போட்டியிட்டு ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. நசீர் அஹமட் நாடாளுமன்றம் வந்தார். அவர் எம்.பி. பதவியை இழப்பதால், விருப்பு வாக்குப் பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ள அலிசார் மௌலானா எம்.பி. யாகப் பதவியேற்கவுள்ளார்.

அவரின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் நாடாளுமன்ற செயலாளருக்கு அனுப்பி வைக்க முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-44)

## திட்டங்களைத் தெரியப்படுத்தாததால் கூட்டத்திலிருந்து மக்கள் வெளிநடப்பு

சாவகச்சேரி, ஒக். 8

சாவகச்சேரி நகரசபையால் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களைத் தெரியப்படுத்த செயலாளர் மறுத்ததால் மக்கள் கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

உள்ளூராட்சிமன்றங்களில் சபை இயங்கிய காலத்தில் (2022) மக்கள் பங்களிப்புடன் அனுமதிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் உள்ளூர் உதவித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபையால் 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் முன்னெடுக்கவுள்ள வேலைகள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் கூட்டம் நேற்றுமுன்தினம் பிற்பகல் நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நகரசபையின் 11 வட்டாரங்களைச்சேர்ந்த பொதுமக்கள் கலந்துகொண்டனர். கூட்டத்தில் பங்கேற்ற சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை மக்களின் பார்வைக்குக் காட்சிப்படுத்தவேண்டும் என்று கேட்டார். அதற்குச் செயலாளர் மறுப்புத் தெரிவித்ததையடுத்து அங்கிருந்த மக்கள் வெளியேறினர். அதையடுத்து கூட்டம் நடைபெறாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டது. (எ-9)

## சீமெந்துத் தொழிற்சாலையில் இரும்பு திருடியவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 8

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் இரும்புத் திருட்டில் ஈடுபட்ட நபரொருவர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரைக் கட்டிப் போட்டுவிட்டு காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பெருமளவு இரும்புகள் திருடப்பட்டன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், சந்தேகநபரான 26 வயதுடைய இளைஞர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

அவரைச் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தும் பொறிமுறைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிறிபேர்க் கல்லூரி சிறுவர்தின நிகழ்வு



சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் இடம்பெற்றது.நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் கே.சற்குணதேவன் ஓய்வுநிலை அதிபர் என்.அருட்சோதி பங்கேற்றார். இதன்போது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வும் தரம் - 6 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெற்றன.நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-159)



# எருக்கலம்பிட்டியில் பரிசளிப்பு நிகழ்வு

புனித ரபீவுனில் அன்னல் மாதத்தை முன்னிட்டு மன்னாரில் நடத்தப்பட்ட பேச்சு, கவிதை, பாடல் மற்றும் குறான் மனனம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு எருக்கலம்பிட்டி ஸயீதிய்யா அரபுக் கல்லூரி வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.கொழும்பு அயன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் அல்ஹாஜ் ஏ.டபிள்யூ.நஜீப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.மஸ்தான் கலந்து கொண்டார். சிறப்புப் பேச்சாளராக எருக்கலம்பிட்டி ஸயீதிய்யா அரபுக்கல்லூரி அதிபர் அல்ஹாஜ் அஷ் ஷேஹ் அல் ஆலிம் எம்.கே.நூறுல்லாஹ் பங்கேற்றார். (ச-60)



# உதவி வழங்கல்

கற்பகா அறநெறிப் பாடசாலைக்கு கொட்டில் அமைப்பதற்கான கூரைப் பொருள்களையும், அறநெறி போதிக்கும் இரண்டு ஆசிரியர்களுக்கு இரு துவிச்சக்கரவண்டிகளையும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமி நேரடியாகச் சென்று அண்மையில் கையளித்தார். அத்துடன் முத்துக்குமாரசுவாமி அறநெறிப் பாடசாலையின் கட்டடப் பணிகளுக்காக ஒன்பதாம் கட்டமாக 2இலட்சம் ரூபா நிதி, வங்கிக் கணக்கிலக்கத்தில் வைப்பிலிடப்பட்டது. (ய-66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் மேற்படி ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் செயலாளரும், ஆசிரியருமான இரா.செல்வவடிவேல் மகாபாரதச் சொற்பொழிவு ஆற்றினார். தொடர்ந்து யாழ். துணவி அ.மி.த.க. பாடசாலை அதிபரின் கோரிக்கைக்குஅமைய மாணவர்களுக்கு 25ஆயிரம் ரூபா பெறுமதியான எழுதுபொருள்கள் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. (ய-66)



கோப்பாய்ப் பிரதேசசெயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப்பிரிவின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா பிரதேசசெயலக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ய-66)



சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதிக பயனாளிகளை இணைத்துக் கொண்ட வலி. வடக்கு பிரதேசசெயலகம் தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.பயனாளிகளை திட்டத்தில் இணைத்த பிரதேசசெயலக அலுவலர்கள் அண்மையில் சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (ய-9)



# கண் பரிசோதனைகளும் கண்ணாடிகள் வழங்கலும்

ஏழாலையில் சர்வதேச சிறுவர் - முதியோர் தினத்தை முன்னிட்டு இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் நிகழ்வும் ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பின் தலைவர் வே.மயூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி கெ.இந்திரமோகன், சிறப்பு விருந்தினராக சுகாதாரப் பரிசோதகர் ச.கடம்பரூபன் ஆகியோர் கலந்துகொண்டனர்.இதன்போது கண் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு ஏழாலையைச் சேர்ந்த 24 முதியோர்களுக்கும், 16 மாணவர்களுக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதடியில் இன்று காலை புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 8

கைதடி கிழக்கு சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் புலமைப்பரிசில் கருத்தரங்கொன்று இன்று காலை 7.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் மாணவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ம)

## சமுர்த்திப் பயனாளிகளால் தென்மராட்சியில் துப்புரவு

சாவகச்சேரி ஒக்.8

சர்வதேச சிறுவர் - முதியோர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளால் ஒவ்வொரு பிரிவு ரீதியாக சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மழை வெள்ளம் தேக்கமடையும் இடங்கள், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்கள் என்பன இனங்காணப்பட்டு அவை துப்புரவு செய்யப்படுகின்றன.

அந்தந்த சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுடன் இணைந்து சமுர்த்திப் பயனாளிகள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ச-9)

## கிராமஅலுவலரிடம் பணம் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஒக். 8

பெண் கிராமஅலுவலரிடம் இருந்து பெருந்தொகைப் பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் உரும்பிராய்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. உரும்பிராயிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள உரும்பிராய் சந்தி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த பெண் கிராம அலுவலர் அணிந்திருந்த கைப்பையை, மோட்டார்சைக்கிளில் வேகமாகப் பயணித்த இரண்டு இளைஞர்கள் அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் கிராம அலுவலரால் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கைப்பைக்குள் அலைபேசி மற்றும் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் என்பன இருந்தன என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

## பட்டதாரிகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி கல்வி நிலையத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பைப் பூர்த்திசெய்த பட்டதாரிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்வி கல்வி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கலைமகள் இலவசக்கல்வி கல்வி நிலையம் மற்றும் கலைமகள் இலவசக்கல்வி கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கமைத்தன.

நிகழ்வில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ் ரகுராம், ஓய்வுநிலை நில அளவை அத்தியட்சகர் ச.சிவராஜா,ஓய்வு நிலை அதிபர் ச.இராமலிங்கம், சங்குவேலி அ.மி.த.க. பாடசாலை அதிபர் வீ.சிவாகரன், மாணவர்கள், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள்முயற்சிக்குஒத்துழைப்புக்கிடைக்கும். பணிச்சுமை அதிகரிப்பதால் சற்று சோர்வு ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சி தரும். பேசும்போது பொறுமை வேண்டும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆலோசனை அவசியம். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்ப்புகளைக் கடந்து வெற்றி பெறுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படலாம். கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும்.சகோதரர்கள் உதவிகரமாக இருப்பார்கள். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்படும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம்தேவை. எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும்.

**மீனம்:** புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். ஆதாயம் உண்டாகும். உடல் நலனில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். தடைகள் அகலும். தள்ளிப்போன வாய்ப்புகள் தேடி வரும்.

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக். 8

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் பிரபல சட்டத்தரணியுமான அமரர் அடலேறு மு.ஆலாலசுந்தரத்தின் 38ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சனசமூக நிலையத் தலைவர் ச.பிரசன்னா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் பங்கேற்கவுள்ளார். (ச-66)

## நாட்டைச் சுற்றிவருகின்ற உலக சாதனை முயற்சி

யாழ்ப்பாணம், ஒக். 8

உலகசாதனை படைக்கும் நோக்கில், கரையோர வழித்தடத்தின் ஊடாக இலங்கையைச் சுற்றிப் பயணித்து வரும் வீரர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பருத்தித்துறை கரையைக் கடந்து பயணத்தைத் தொடர்ந்துள்ளார்.

காலி,அல்பிட்டிப் பிரதேசத்தை சேர்ந்த தடகளப் பயிற்சியாளரான சமன் உடுகம சூரி (வயது-52) என்பவர் கடந்த செப்ரெம்பர் 8ஆம் திகதி கொழும்புத் துறைமுகநகரில் இருந்து சாதனை நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார். அங்கிருந்து இலங்கையின் தென் கரையோரத்தினூடாகப் பயணித்து கிழக்குக் கரையோரம் வழியே தற்போது வடக்குக் கரையை வந்தடைந்துள்ளார். நடை, ஓட்டம், நீச்சல் என கலப்பு நிலையில் இந்த சாதனைப் பயணத்தை முன்னெடுத்து வருகின்றார்.

தொடர்ந்து வடமராட்சி கரையோரங்களினூடாக யாழ்ப்பாணக் கரையோரத்தை அடைந்து மன்னார் கரையோரப்பகுதி ஊடாக இலங்கையின் மேற்குக் கரைவழியே கொழும்புத் துறைமுக நகரில் ஆரம்பித்த இடத்தைச் சென்றடைவதற்குத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக 2000ஆம் ஆண்டிலும், 2010ஆம் ஆண்டிலும் இருதடவை இதேபோன்று இலங்கையை கரைவழியாக பயணித்துள்ள போதிலும் குறித்த பயணத்தை உலக சாதனைப் புத்தகத்தில் சேர்ப்பதற்குத் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்கமுடியாத நிலையால் அது சாத்தியப்படவில்லை எனவும் அதனால் இந்தமுறை உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்வதற்கு ஏற்றவாறு அத்தாட்சிப்படுத்தல்களுடன் நடைபயணத்தைத் திட்டமிட்டு முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உரிமையைப் பறிக்க ஓங்குகிறது இனவாத அதிகாரம்

## மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் நிரோஷ் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 8

தமிழ் மக்களின் உரிமைகளை அடக்கி இருப்பை அழிப்பதற்காக பேரினவாத சிந்தனையின் அடிப்படையில் அதிகாரம் பிரயோகிக்கப்பட்டு நீதித்துறை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.

தமிழர்களுக்கான நீதிக்கு உள்நாட்டுப் பொறிமுறை தீர்வாகாது என்பது பட்டவர்த்தனமாக புலப்படுகிறது.

இவ்வாறு முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு நீதிகோரி யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் பங்கேற்றபோது வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களை அடக்குவதற்காகவே அரசாங்கத்தால் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. அதற்கும் ஒரு படி மேலே சென்று தற்போது நேரடியாகவே நீதிபதிகளின் தீர்ப்புச் சுதந்திரத்தில் கைவைக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுயாதீனம் பாதுகாக்கப்படுவதற்காக தமிழ் மக்கள் போராடும் நிலையில், இலங்கை அரச கட்டமைப்பு பயங்கரவாதச் சட்டம், சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் சட்டம், தொல்லியல் சட்டங்கள் என இனவாத பெரும்பான்மைப் பலத்தைகொண்டு பல்வேறு சட்டங்களை எமக்கெதிராகக் கொண்டுவருகிறது.

குருந்தூர்மலை போன்ற பூர்வீக இடங்களில் தமிழர்களின் இருப்பை அழிப்பதற்காக நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றுமாறு நீதிபதிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. தனிச்சிங்கள பௌத்த இனவாத தேசமாகக் கட்டியெழுப்பவே அனைத்தும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளுக்கு பொறுப்புக்கூற உள்நாட்டுப்பொறிமுறை தீர்வாகாது என்பது இவற்றினூடாக பட்டவர்த்தனமாகப் புலப்பட்டுள்ளது- என்றார். (ச)

# ஒடுக்கும் சட்டங்களை ஒழிப்பதற்கு தமிழ்ப் பிரதிநிதிகள் குரலெழுப்புக

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 8

**ஜனநாயக நாட்டில் கருத்துச் சுதந்திரம் மிக முக்கியமான ஒன்றாகும். இதனை ஒடுக்குவதற்கு நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதனை முற்றாக நிராகரிப்பதற்கு வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் கூட்டாக குரலெழுப்பவேண்டும்.**

இவ்வாறு ஊடக சந்திப்பில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி யோகராசா கன கரஞ்சினி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்குவதற்கே அதிகாரத் தரப்பால் மோசமான சட்டங்களான பயங்கரவாதத் தடைச் சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன.

எதிர்வரும் தேர்தல்களை எதிர்ப்பின்றி இலகுவில் எதிர்கொள்ளவே அரசாங்கம் இந்தச் சட்டவரைவுகளை நிறைவேற்ற எத்தனிக்கிறது.

கருத்து வெளியிடும் சுதந்திரத்தை முறையற்ற வகையில் மட்டுப்படுத்தும் இவ்வாறான சட்டங்களை இல்லாது செய்ய - ஜனநாயக வழியில் நாம் வாழ - சர்வதேச அழுத்தம் வேண்டும்.

அதற்கு வடக்கு - கிழக்கு தமிழ்ப் பிரதிநிதிகள் கூட்டாக குரலெழுப்ப வேண்டும் - என்றார். (ச-125)



# சிங்கப்பூர் மாநாட்டில் பங்கேற்ற யாழ். மாணவிக்கு கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 8

தென்னாசியா மற்றும் பசுபிக் நாடுகளின் பிரதிநிதி களுடனான மாநாட்டில் பங்கேற்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை சங்கானை கலாசார மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

'சிறுவர் தலைமையிலான பரிந்துரைத்தல் மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பு' எனும் நிகழ்ச்சித் திட்டத்துக்காக வேள்ட் விஷன் நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட, ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் தரம் 10 இல் கற்கும் ஜெயசீலன் குஜிதா என்ற மாணவியே இந்த மாநாட்டில் பங்கேற்றார்.

குறித்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து மூவர் தெரிவாகியிருந்த நிலையில் தமிழ் மாணவியாக குஜிதா மாத்திரமே தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)

# சிறு முயற்சியாளர் விற்பனைச் சந்தை

கோப்பாய் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினரின் ஏற்பாட்டில் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக விற்பனைச் சந்தை நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலக வளாகத்தில் பிரதேச செயலர் திருமதி. சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

இந்த விற்பனைச் சந்தையில் அதிகளவான முயற்சியாளர்கள் பங்கேற்று தங்களின் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தி விற்பனையில் ஈடுபட்டனர். (ச-66)





# கர்நாடக சங்கீதப் போட்டிகள் உசன் ம. வி. தேசியத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 7

அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் மாகாண மட்டத்தில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் மூன்று போட்டிகளில் வெற்றியீட்டி தேசியத்துக்குத் தெரிவாகியுள்ளது.

இந்த மாகாண மட்டப் போட்டிகள் கடந்த 30ஆம் திகதி தொடக்கம் கடந்த புதன்கிழமை வரை பூநகரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இதில் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தி லிருந்து வயலின் இசையில் சி.சருயனன், தில்லானாவில் சி.சீராளன், தனியிசையில் தி. ஆர்த்திகா ஆகிய மாணவர்கள் முதலாமிடத்தைப் பெற்று தேசியத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-159)



மன்னார் பேசாலை சென்.மேரிஸ் வித்தியாலய சிறார்கள் மற்றும் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகளின் சிறுவர்கள் இணைந்து சிறுவர் தினத்தை கடந்த புதன்கிழமை கொண்டாடினர். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரிசிக்கான அல்லாட்டம்!

'எல் – நினோ' தாக்கத்தின் விளைவாக இலங்கையில் அண்மைக்காலத்தில் மட்டும் சுமார் 70 ஆயிரம் ஹெக்ரேயர் நெற்செய்கை அழிவடைந்திருக்கின்றது என்று வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தத் தகவல்களைப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். இலங்கையின் உணவுற்பத்தியும், உணவுக் கையிருப்பும் இவற்றில் தன்னிறைவு காணும் நிலையும் அடுத்த ஆண்டும் கானல்நீராகப் போகின்றது என்பதே அமைச்சருடைய கருத்தின் மையப்புள்ளி.

'எல் – நினோ' உலகப்பொதுவானது. அதன் அழிவுகள் இலங்கைக்கு மட்டுமானதல்ல. ஆனால், பொதுப்பாடான அளவுகோலால் இந்த அழிவுகளை அளந்தெழுதிவிட முடியாது. ஏனெனில், இலங்கையின் பொருளாதார நிலைமை இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பேசும் நிலையில் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இலங்கை பல தடவைகள் அரிசியை இறக்குமதி செய்திருக்கின்றது. கோத்தாபய ராஜபக்சவின் காலத்தில் கொண்டுவரப்பட்ட இரசாயன உரத்தடையால் இலங்கையில் எதிரொலித்த உற்பத்தியிழப்பு, மியான்மர், பாகிஸ்தான் நாடுகளின் அரிசி தொன் கணக்கில் இந்தத் தீவுக்குள் இறக்குமதியாகக் காரணமாக அமைந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்குவாரங்களும் இலங்கை உலக நாடுகளிடம் அரிசிக்குக் கையேந்தும் நிலையை ஏற்படுத்தின. இதன் தொடர்ச்சியான சம்மட்டி அறையே, வெப்பத்தால் இப்போது ஏற்பட்டுள்ள பயிரழிவுகளும் உற்பத்தியிழப்புகளும். இந்த அல்லாட்ட நிலை, இத்துடன் முடிந்துவிடுமா? என்றால் 'இல்லை' என்பதுதான் விவாதத்துக்கு இடமின்றிய பதில். ஏனெனில், வெப்பத்தால் ஏற்பட்ட தண்ணீர் இருப்பிழப்பால் அடுத்த பெரும்போகச் செய்கைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. 'பரந்துபட்ட' விவசாயத்துக்குப் பதிலாக, 'மட்டுப்பட்ட' விவசாய நடவடிக்கைகள்தான் இம்முறை பெரும்போகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. எனில், அடுத்த ஆண்டும் அரிசிப் பஞ்சம் தலைவிரித்தாடும். அரிசிக்கான கேள்வியும் விலையும் எகிறிச் செல்லும். இது வறியோரின் வயிற்றில் அடிப்பதற்குத் தேவையான அத்தனை ஏதுநிலைகளையும் ஏற்படுத்தும்.


சர்வதேச நாணய நிதியத்தின் அடுத்தகட்ட நிதி விடுவிக்கப்பட வேண்டுமாயின், அதனுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைக்குஏற்ப வரிகளை அதிகரிக்க வேண்டியிருக்கின்றது என்று மத்திய வங்கியின் ஆளுநர் எச்சரித்துள்ளார். அவ்வாறு வரி அதிகரித்தால் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகளும் கட்டணங்களும் அதிகரிக்கும். இதை மெய்ப்பிக்கும் வகையில் எரிவாயு, எரிபொருள்களின் விலைகள் இப்போதே அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றன. அடுத்தகட்டமாக உணவுப் பொருள்களின் விலைகள் தாறுமாறாக எகிறும். குறைந்த பட்சம் அரிசியிலாவது தன்னிறைவு கண்டிருந்தால் அல்லது அடுத்தசில மாதங்களிலாவது தன்னிறைவு காணக்கூடிய ஏதுநிலை இருந்தால் ஏதோவொரு சிறு ஆறுதலேனும் ஆழ்மனதில் ஏற்பட்டிருக்கச் சாத்தியங்கள் உண்டு. ஆனால் இப்போது இருமுனை நெருக்குவாரங்கள்தான் இலங்கையர்களை குறிப்பாக வறியவர்களைச் சூழ்ந்திருக்கின்றது.

'எல் – நினோவை' எதிர்கொள்வதற்காக உலக நாடுகள் பல்வேறுபட்ட வியூகங்களை வகுத்தன. கடும் வெப்பநிலைக்குத் தாக்குப்பிடிக்காத பாரம்பரிய பயிர்ச்செய்கைளைத் தற்காலிகமாகக் கைவிட்டு வெப்பநிலையைத் தாக்குப்பிடித்து விளைச்சல் தரவல்ல மாற்றுப் பயிர்ச்செய்கைகளை பரீட்சித்துப் பார்த்து வெற்றிபெற்ற நாடுகளும் இருக்கவே செய்கின்றன. ஆனால், இலங்கையின் நிலையோ பரிதாபத்துக்குரியதே. அடுத்த வரவு–செலவுத் திட்டத்தில் விவசாயத்துறைக்காக 100 பில்லியன் ரூபாவை மட்டுமே அரசாங்கம் ஒதுக்கியிருக்கின்றது. அனேகமாக அந்தப் பணத்தின் பெரும்பாலான பகுதி இறக்குமதி உணவுப்பொருள்களுக்காகவே செலவுசெய்யப்படும். இறக்குமதி உணவுப்பொருள்கள்தான் ஊழல் முறைகேடுகள் இடம்பெறுவதற்கும், அரசியல்வாதிகளின் பொக்கெற்றுகள் கறுப்புப் பணத்தால் நிரப்பப்படுவதற்கும் அதிக வாய்ப்பை வழங்குகின்றன. இவ்வாறான சிந்தனைப் பிறழ்வான நாட்டில் அரசாங்கத்தில் – நிர்வாகத்தில் தன்னிறைவு காண்பதெல்லாம் இன்னும் பல தசாப்தங்களுக்குச் சாத்தியமற்ற விடயங்களே.

### நாளொரு நல்வார்த்தை

வியர்வை சிந்தாத உன்னாலும்,
மை சிந்தாத பேனாவாலும்
எதையும் சாதித்திட முடியாது.

- சேகுவேரா -




# நிகழ்நிலை காப்புச்சட்டம் மீளப்பெறப்பட வேண்டும்!

## வலியுறுத்துகின்றது எதிர்க்கட்சி

**கொழும்பு, ஒக் .8**

**ஊடக சுதந்திரத்தை முற்றாக இல்லாதொழிக்கும் நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவை மீளப்பெறும் முடிவை ஜனாதிபதி எடுக்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே சஜித் இவ்வாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

230 மில்லியன் மக்கள் தொகை கொண்ட பாகிஸ்தானின் பிரதமரான இம்ரான்கானால் கூட இதுபோன்ற சட்ட வரைவைக் கொண்டுவர முடியவில்லை. இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் சார்ந்த நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறுவோம் எனக் கூறியதாலேயே இம்ரான்கானால் அதைச் செய்யமுடியாமல்போனது.

நமது நாட்டிலுள்ள இவ்வாறான நிறுவனங்கள் நாட்டை விட்டு வெளியேறினால் அந்நிய நேரடி முதலீடுகளுக்கு என்ன நடக்கும் என்பதை சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்தச் செயலால் மக்களின் அடிப்படை உரிமை, ஜனநாயக உரிமை மற்றும் மனித உரிமைகள் என்பன மீறப்படுகின்றன. இது போன்ற சர்வாதிகார செயல்களுக்குச் செல்லாது, சுதந்திரமாக தகவல்களைப் பெறும் வகையில் வலுவான சட்டமூலத்தைக் கொண்டுவர வேண்டும் என கோருகின்றேன் - என்றார். (எ-44)

# டிஜிற்றல் பொருளாதாரம் வேலைத்திட்டம் ஆரம்பம்

## தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய, டிஜிற்றல் பொருளாதார மாற்றத்தைத் துரிதப்படுத்தும் வேலைத் திட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதனூடாக இலங்கைக்குள் வலுவான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கமுடியும் என்று தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

# கரும்புகையை வாகனங்கள் வெளியேற்றினால் முறையிடலாம்

கொழும்பு, ஒக். 8

அதிகளவில் கரும்புகையை வெளியேற்றும் வாகனங்களை அவதானித்தால் அது குறித்து முறையிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிக புகையை வெளியேற்றும் வாகனங்களை இலக்கத்தகடு தெளிவாகத் தெரியும் வகையில் ஒளிப்படமெடுத்து 070 3500 525 எனும் 'வட்ஸப்' இலக்கத்துக்கு அனுப்பும் பட்சத்தில் அதுகுறித்த அடுத்தகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை** 09.10.2023 திங்கட்கிழமை புரட்டாதி 22

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சி ஜெர்சியின் நிறம் (காவி நிறம்) சர்ச்சையாகியிருந்த நிலையில், தற்போது இன்னுமொரு நெருக்குவாரத்துக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. அதுதான் டெங்குத்தொற்று.

இந்திய அணியின் இளம் வீரரும் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரருமான சுப்மன் கில் டெங்குத் தொற்றுக்கு ஆட்பட்டிருக்கின்றார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதலால் அவர் இன்றைய ஆட்டத்தில் களமிறங்குவது சந்தேகம் என்று அறிவித்துள்ளது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.

இந்த வருடம் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையில் தவிர்க்க முடியாத நாயகனாக வலம்வந்தார் கில். எத்தனையோ ஆட்டங்களை தனிநபராக வென்றுகொடுத்தார். இப்போது டெங்குத் தொற்று இந்திய கிரிக்கெட் முகாமை மொத்தமாக ஆட்டம் காண வைத்திருக்கின்றது.

டெங்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்திய வீரர்களுக்குக் கடும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வீரர்கள் செல்கின்ற, பயிற்சியெடுக்கின்ற இடங்களெல்லாம் தீவிர சுகாதாரப் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

2011ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றிய பின்னர் வேறெந்த உலகக் கிண்ணத்தையும் இந்திய அணி கைப்பற்றவில்லை. இந்த கறுப்புப் பக்கத்துக்கு இம்முறை நடைபெறும் (இதுவும் இந்தியாவில்தான்) உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றி பதிலடி கொடுக்கலாம் என்ற முனைப்பிலேயே இந்திய முகாம் காத்திருந்தது. இப்போது வெளிவரும் செய்திகளும் நடக்கும் சம்பவங்களும் இந்திய அணிக்கு நல்ல சகுனமாகத் தென்படவில்லை.

# இலங்கைக்கு எதிராக உலகசாதனை வெற்றி

## தென்னாபிரிக்கா மிரட்டலாட்டம்




புதுடில்லி, ஒக். 8

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில், பல்வேறு உலக சாதனைகளுடன் அபாரமான வெற்றியைப் பதிவுசெய்தது தென்னாபிரிக்கா.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்க அணியின் ஆரம்ப வீரரான ரெம்பா பவுமா வெறும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அதன் பின்னர் ஜோடி சேர்ந்த குயின்டன் டி ஹொக் மற்றும் வான் டென் டசன் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சைப் புரட்டியெடுத்தனர். இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க தென்னாபிரிக்காவின் ஓட்டச் சராசரி மின்னல் வேகத்தில் உயர்ந்துகொண்டிருந்தது. 83 பந்துகளில் சதம் கடந்தார் குயின்டன் டி ஹொக். டசனின் சதம் 103 பந்துகளில் பதிவானது. 100 ஓட்டங்களுடன் குயின்டனும், 108 ஓட்டங்களுடன் வான் டென் டசனும் ஆட்டமிழந்தனர். இலங்கை அணி நிம்மதிப் பெருமூச்சு விடுவதற்குள் சிக்சர் மழை பொழிந்தார் எய்டன் மார்க்ரம். 49 பந்துகளில் எய்டன் மார்க்ரமின் சதம் பதிவானது. உலகக்கிண்ணத் தொடரில் குறைந்த பந்துகளில் சதம் கடந்தவர் என்ற கெவின் ஓ பிரையனின் சாதனையைத் தகர்த்தார். 54 பந்துகளில் 106 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் எய்டன் மார்க்ரம். மில்லர் மற்றும் கிளாசன் கடைசிக்கட்ட அதிரடியைக் கையிலெடுத்தனர். கிளாசன் 32 ஓட்டங்களையும், மில்லர் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க தென்னாபிரிக்க அணி 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்களை இழந்து 428 ஓட்டங்களைப் பெற்றது. உலகக்கிண்ண ஆட்டமொன்றில் எடுக்கப்பட்ட ஆகக்கூடிய ஓட்டமாகவும் இது பதிவானது.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர் பதும் நிசங்க ஓட்டமெதையும் பெறாது ஏமாற்றினார். குசல் பெரேரா 7 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இலங்கை அணியின் கதை முடிந்துவிட்டது என்றிருக்கையில் அதிரடிக்கு இலக்கணம் காட்டினார் குசல் மெண்டிஸ். அவர் 42 பந்துகளில் 76 ஓட்டங்களைக் குவித்தார். தனஞ்சய டி சில்வா நேற்றுப் பிரகாசிக்கவில்லை. அசலன்க மற்றும் தசுன் சானக இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க அணி கௌரவ நிலையை அடைந்தது. அசலன்க 79 ஓட்டங்களுடனும், சானக 68 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை அணி 326 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம)

# பங்களாதேஷ் நேற்று பதற்றமில்லாத வெற்றி




புதுடில்லி, ஒக். 8

உலகக்கிண்ணத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டத்தில் சகிப் அல் ஹசனின் அசத்தலான பந்துவீச்சாலும், மிராஸின் சகலதுறை ஆட்டத்தாலும் ஆப்கானிஸ்தானை மிகமிக இலகுவாகத் தோற்கடித்தது பங்களாதேஷ்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணியை 156 ஓட்டங்களில் கட்டுப்படுத்தியது பங்களாதேஷ். ஆப்கானிஸ்தான் அணி பலமான ஆரம்பம் காண்பதற்கான ஏதுநிலைகள் இருந்தபோதிலும் பங்களாதேஷின் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் இப்ராகிம் சடான் (22), ரஹ்மட் ஷா (18), நஜிபுல்லா சடான் (05) ஆகியோரை அடுத்தடுத்துப் பவிலியன் அனுப்பினார். மிராஷூம் சகிப் அல் ஹசனுக்கு ஈடுகொடுத்துப் பந்துவீச பங்களாதேஷின் சுழலில் கட்டுண்டது ஆப்கானிஸ்தான். மிராஸ், சகிப் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். அதிகபட்சமாக குர்பராஸ் 47 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தன்சிட் ஹசன் 5 ஓட்டங்களுடனும், லித்தன் டாஸ் 13 ஓட்டங்களுடனும் ஏமாற்றினாலும் மிராஸ், சான்ரோ இருவரும் அரைச்சதம் கடந்து அணியை நிலைப்படுத்தினர். 57 ஓட்டங்களுடன் மிராஸ் வீழ்ந்தார். சான்ரோ 59 ஓட்டங்களுடன் இறுதி வரை ஆட்டமிழக்காதிருந்தார். 92 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை மாத்திரம் இழந்து 6 இலக்குகளால் வென்றது பங்களாதேஷ். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தினம் ஒரு பரிசு**

## நாள் 2 இன் வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| ச.துவாரகன் | - யாழ்ப்பாணம் |
| வாசுகி நந்தகுமார் | - அச்சுவேலி |
| எஸ்.வைஸ்ணவி | - கலட்டி |
| தே.யசோதரன் | - உடையார்கட்டு |
| வ.நிரோசன் | - வேலணை கிழக்கு |
| ஜே.நெக்சன் | - உடுப்பிட்டி |
| டி.சங்கவன் | - மாவிட்டபுரம் |
| கி.கிரிஷாந் | - வவுனியா |
| த.நிசாந்த் | - அல்வாய் |
| நா.ஹரிநேசன் | - வட்டுக்கோட்டை |
| எ.ஹரிகரன் | - மூளாய் |
| எஸ்.அமலேஸ் | - சேந்தான்குளம் |
| ஜெ.பிரவீனா | - கொக்குவில் |
| எம்.மார்க்கண்டேயன் | - அடம்பன் |
| எல்.நிலோயன் | - கட்டைப்பிராய் |

# ஆஸியை வீழ்த்துவதே முதன்மையான இலக்கு

**ராவிட் வெளிப்படை**

புதுடில்லி, ஒக். 8

உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் மோதவுள்ள நிலையில், இன்று அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடிக்கவேண்டிய அத்தனை வழிமுறைகளையும் இந்தியா மேற்கொள்ளும் என்று இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராவிட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருநாள் கிரிக்கெட் போட்டியை பொறுத்தவரையில் தற்போதைய சூழ்நிலைகளில் எவ்வளவு ஓட்டங்களைக் குவித்தால் வெற்றிபெற முடியும் என்பதை அறுதியிட்டு கூறமுடியாது. உலகக்கிண்ணத் தொடர் என்பதால் வெவ்வேறு நகரங்களில், வெவ்வேறு ஆடுகளங்களில் விளையாடுகிறோம். சிவப்பு மண், கறுப்பு மண் ஆடுகளங்கள் உள்ளன.

ஒவ்வொரு ஆடுகளமும் தனித்துவமாக இருக்கும். மேலும் அளவிலும் மாறுபடும். டில்லி, பெங்களூருவைவிட சென்னை ஆடுகளம் அளவில் பெரியது.

இதனால் உலகக் கிண்ணத் தொடரைப் பொறுத்தவரையில் மைதானத்தின் சூழ்நிலை, ஆட்டத்தின் சூழ்நிலை ஆகியவற்றை எவ்வாறு தகவமைத்துக் கொண்டு விளையாடுகிறோம் என்பதில்தான் அனைத்தும் இருக்கிறது- என்றார். (ம)

## உதயனின் பரிசுக்குவியல்



**தினம் ஒரு பரிசு 4**

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான இன்றைய (08.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ........................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம் ஓர் அலசல்



உலகக்கிண்ணத் தொடரின் இன்றைய ஆட்டத்தில் அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. சென்னை - சேப்பாக்கம் மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்திய அணி சொந்தமண் என்ற பெரும் பலத்துடன் இந்தத் தொடரை எதிர்கொள்கின்றது. அணியின் சமநிலைத்தன்மை மற்றும் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாம் என்பன ஓரளவுக்கு உறுதிப்படுத்தப்பட்டாயினும், அண்மைக்காலமாக அணிக்குள் செலுத்தப்படும் அதீத ஊடக வெளிச்சம் வழக்கம்போல இம்முறையும் இந்திய அணிக்குத் தேவையற்ற அழுத்தங்கள் ஏற்படக் காரணமாக அமையலாம். இந்திய அணியின் ஆரம்ப வீரர் கில் இன்று களமிறங்குவது சந்தேகமாகியிருக்கின்றது. ஆதலால், இஷான் கிஷான், ரோகித் சர்மாவுடன் ஆரம்ப வீரராகக் களமிறங்கி ஸ்ரேயஸ் மத்திய வரிசையில் சேர்க்கப்படலாம். பந்துவீச்சில் இந்திய வேகப்பந்துக் கூட்டணியின் அண்மைய பேரெழுச்சி ஆஸியிடம் எடுபடுமா? என்பது சந்தேகமே. ஏனெனில் அவுஸ்திரேலிய அணி வேகப்பந்துவீச்சை இலாவகமாக எதிர்கொள்ளும் திறன்படைத்த அணி. ஆட்டம் சென்னையில் இடம்பெறுவதாலும், சென்னை அணி அஸ்வினுக்குப் பரிச்சயமானது என்பதாலும் அஸ்வின், ஜடேஜா, குல்தீப் என மூன்று சுழற்பந்துவீச்சு வீரர்களுக்கு விளையாடும் பதினொருவர் குழாமில் வாய்ப்பு வழங்கப்படலாம்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை சுழற்பந்துவீச்சாளர்கள் அந்த அணியில் துருப்புச்சீட்டுக்களாக இருப்பது சந்தேகமே. ஆனால், மக்ஸ்வெல் ஒரு பகுதிநேரப் பந்துவீச்சாளராகவும் அல்லது 10 பந்துப்பரிமாற்றங்களை வீசக்கூடியவராகவும் கம்மின்ஸால் கையாளப்படலாம். சுழற்பந்துவீச்சை சர்வசாதாரணமாக எதிர்கொள்ளவல்ல சிமித், லபுசேன், வோர்னர் ஆகிய வீரர்கள்தான் அவுஸ்திரேலிய அணியின் இன்றைய கலங்கரை விளக்கங்கள். சென்னை சேப்பாக்கத்தில் 280 ஓட்டங்கள் நல்ல ஓட்டப்பெறுமதியாக இருக்கும். நாணய சுழற்சியில் வெல்லும் அணி முதலில் பந்துவீச வாய்ப்பு அதிகம்.



**இன்றைய ஆட்டம்**

**இந்தியா - அவுஸ்திரேலியா**

இடம் சென்னை
நேரம் பி.ப. 2.00 மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு மற்றும் ROOM வாடகைக்கு

யாழ். மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்திற்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய சிறிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. (மாணவர்களுக்கு மட்டும், முற்றிலும் மாபிள் பதித்த வீடு)

தொடர்புகளுக்கு: 077 084 5583
076 982 9183

## விற்பனைக்கு



orbitrec உடற்பயிற்சி இயந்திரம்

தனி ஒருவரின் பாவனையில்

0777 110383

ரூபா 20,000/=

## கார் விற்பனைக்கு

WP HY xxxx இலக்கமுடைய Honda Civic கார் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0777 100 324

## ஆசிரியர் தேவை

பிரபல பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய இடங்களில் ஆசிரியர் தேவை.

தொடர்பு: 077 468 2951, 077 408 3656.

## வாகனம் வாடகைக்கு

சேல்ஸ் வாகனம் வாடகைக்கு விடப்படும். சூப்பர் AC மூடி அடிக்கப்பட்ட வாகனம்.

தொடர்பு: 077 925 4050

## இசை வகுப்புக்கள்

Quitar மற்றும் Organ வகுப்புக்கள் தனியாகவோ or குழுவாகவோ கற்பிக்கப்படும். நேரில் வந்தும் கற்பிக்கப்படும்.

தொடர்பு : 077 942 4844

## மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1993
Graduate உயர்பதவி
Colombo Largest Group

076 852 9425


## கணேசா முன்பள்ளி ஆசிரியர் தின விழா


யாழ்ப்பாணம், ஒக். 8

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளியின் ஆசிரியர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ கணேசா முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளித் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் க.சி.பகவத்சிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ச-66)

## மரண அறிவித்தல்

பிறப்பு
06 . 10 . 1942



இறப்பு
04 . 10 . 2023

### திரு.செல்லத்துரை மனோகரன் (மனோ)

( ஓய்வுபெற்ற அதிபர், யா/பாரதி பாஷ, வித்தியாலயம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க முன்னாள் உப தலைவர்)

யாழ். கொக்குவிலை பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை ஓட்டுமடம், லண்டன், ஜேர்மனி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை மனோகரன் அவர்கள் கடந்த (04.10.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2023) திங்கட்கிழமை ஜேர்மனியில் மதியம் 12.00 மணிக்கு நடைபெற்று நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
சகோதரி - இ.கௌரி
கொழும்பு.
074 382 6848

(CS 52407) A-1


## SUPPORT MANAGER & SUPPORT ENGINEERS - JAFFNA



A unique and ambitious Software company based in Jaffna, Colombo, and London is seeking **1 Support Manager and 3 Support Engineers** to help support the team in Colombo while being able to kick start your IT career with on-the-job experience.

**Manager - Responsibilities**
- Organizes and oversees the schedules of department staff.
- Ensures clients-related supports and tasks are completed within specifications, and on time.
- Provides constructive and timely performance evaluations.
- Handles discipline and termination of employees in accordance with company policy.

**Requirements and skills**
- Bachelor's degree in Computer Science or related field required.
- At least two years of related experience with at least one year in a supervisory role preferred.

**Support Engineers - Responsibilities**
- Ask clients targeted questions to quickly understand the root of the problem.
- Talk clients through a series of actions, either via phone, email or chat, until they've solved a technical issue.
- Ensure all issues are properly logged.

**Requirements and skills**
- HND in Information Technology or Degree in Computer Science or relevant field.
- Excellent problem-solving and communication skills.
- Good understanding of computer systems, mobile devices and other tech products.
- Ability to diagnose and troubleshoot basic technical issues.

Please apply via email to **career@visualbusinessretail.com**
Closing Date: **31st OCT 2023**

**VBR Asia Pvt (Ltd)**
255, KKS Road, Chunnakam,
Jaffna-Sri Lanka


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
23 - 02 - 1964

மறைவு
05 - 10 - 2023

மூன்று தசாப்தகால நண்பனும் வாடிக்கையாளருமாக எம்முடன் இணைந்திருந்த

### திரு. சிதம்பரப்பிள்ளை சுந்தரேஸ்வரன்

(உரிமையாளர் - ஜெயகிருஷ்ணா காட்வெயார்)

அவர்கள் காலமான செய்தியறிந்து மிகுந்த வேதனை அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் துயரிலும் பங்குகொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**சிறி நதியா நகைமாளிகை**
**NSR ஜுவல்லறி**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(cr 40737) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

க.பொ.த (உ / த) வகுப்பிற்கு கற்பிக்கும் / கற்பித்த சேவையிலுள்ள / ஓய்வுபெற்ற, அனுபவமிக்க ஆசிரியர்கள் தேவை. வீட்டிலிருந்தவாறே வேலை (part time + online).

**0760448953 (whatsapp),**
**www.domockexam.com**

தரம் 5 புலமைப்பரீட்சை, GCE (O/L), GCE (A/L) மாதிரி பயிற்சி வினாக்கள் onlineஇல் இலவசமாக.

(CS26457) (Ak.1)

## கடன் வசூலிக்கும் அதிகாரி

இலங்கையின் முன்னணி வர்த்தக வங்கியொன்றின் துணை நிறுவனத்தில் பணியாற்றுவதற்கு

**யாழ்ப்பாணம், வவுனியா**

பிரதேசங்களில் வெற்றிடங்கள் உள்ளன.

- மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் அவசியம்
- மாவட்டங்களில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் அவசியம்
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் பணிக்கு நியமிக்கப்படுவார்கள்
- பாடசாலைக் கல்வியை முடித்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உயர்ந்த அடிப்படை சம்பளம், கமிஷன், மோட்டார் சைக்கிள் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு, ஊக்க கொடுப்பனவு, காப்பீட்டு கொடுப்பனவுடன் மாதம் ரூ 50,000/-க்கும் அதிகப்படியான வருமானம்.

**E-mail: hrmgr@rimacve.com**
**0777 042 564 / 0777 042 583**

FLEX Graphic

## மணமகள் தேவை

01. இணுவில், இந்து, கௌரவகுலம் (V), 1990, அனுஷம், Quantity Surveyor, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
02. கோண்டாவில், இந்து, கௌரவகுலம் (V), 1990, ரேவதி, Phd in Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. கரவெட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990, மகம், MSc. Engineering Finland மணமகனுக்கு மணமகள் தேவை.
04. கந்தர்மடம், இந்து, கௌரவகுலம் (V), 1989, உத்தராடம், Msc, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
05. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990, உத்தரட்டாதி, Phd, Civil Engineering, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
06. உடுப்பிட்டி, இந்து, கௌரவகுலம் (V), 1990, அவிட்டம், BSc Engineering, Newzland மணமகனுக்கு மணமகள் தேவை.
07. பருத்தித்துறை இந்து, கௌரவகுலம் (V), 1990, மகம், Degree Holder Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
08. சுதுமலை, இந்து, கௌரவகுலம் (V), 1975, மிருகசீரிடம், BA Graduate, Austalia மணமகனுக்கு மணமகள் தேவை.
09. இளவாலை இந்து, கௌரவகுலம் (V), 1975, அனுஷம், Diploma Divorce Canada மணமகனுக்கு மணமகள் தேவை.

**S.Sharma J.P Astrologer** Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 . 11 . 1934



உதிர்வு 20 . 09 . 2022

**அமரர் பொன்னம்பலம் கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற - லக்ஸ்சல)

திதி : தசமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
காலமெல்லாம் இருப்பீர்கள் எம் நெஞ்சில்

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

தொல்புரம் மேற்கு, சுழிபுரம். இல.53, சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

(CS 52406) A-1

யாழ்ப்பாணம் மாநகரசபை
**கோம்பயன் மனல் இந்து மயானத்தில் மின்சாரத்தில் எரியூட்டுதல் தொடர்பான அறிவித்தல் - 2023**

கோம்பயன் மணல் இந்து மயானத்தில் உள்ள மின்சாரத்தில் எரியூட்டும் இயந்திரம் மாநகர சபையால் தற்பொழுது புனரமைக்கப்பட்டு மீள்பாவனைக்கு விடப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

கட்டண விபரம் வருமாறு.
- மின்சாரத்தில் தகனம் செய்வதற்கு (பெரியவர்கள்) ரூ. 16,000.00
- மின்சாரத்தில் தகனம் செய்வதற்கு (சிறியவர்கள்) ரூ. 8,000.00

மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

(cr.40736) (N.1)

## இலவசம் / Free

**Kamalam Varma Clinic**
**கமலம் வர்ம சிகிச்சையகம்**
**அக்குபஞ்சர் மற்றும் வர்ம சிகிச்சையகம்**

சகல நோய்களுக்கும் குறைபாடுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்
25 வருட சேவை நிறைவையொட்டி புதிய பெயருடனும் பொழிவுடனும் Oct - 9 தொடக்கம் 18 வரை இலவச சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படும்.
அனைவரும் வாரீர்

**நோய் எதுவாயினும் தீர்வு உண்டு.**

**(ACU) Dr.Sankar - 077 035 7307**
K.K.S Rd, Kokuvil, Jaffna.

(cs.52396) (N.1) (முன் பதிவு அவசியம்)

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 09 . 12 . 1957



உதிர்வு 06 . 10 . 2023

தெல்லிப்பளை கிழக்கு கவளாவத்தை அருள்மிகு ஞானவைரவர் சுவாமி ஆலய பரம்பரை ஆதீன தர்மகர்த்தா

**திருமதி அருந்தவநாயகி சிவதாஸ்**

அவர்கள் கடந்த (06.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரில் பங்குகொள்ளும்....
**உறவினர்கள்.**

(CS 26513) A-1

## ஓவியக் கல்லூரி

**ஓவியம் கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்குமான அரிய சந்தர்ப்பம்**

- அனைத்து மாணவர்களும் ஓவியத்தில் ஆர்வமுள்ள அனைவரும் இச் சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.
- சிறுவர் முதல், சாதாரண தரம், உயர்தரம், பல்கலைக்கழகம் செல்ல இருக்கும் மாணவர்களுக்கும் ஓவியப் பயிற்சி வழங்கப்படும்
- 54 வருடங்கள் அனுபவமுள்ள ஆசிரியர் மூலம் அடிப்படையில் இருந்து பயிற்சிகள் வழங்கப்படும்.
- பெயர்களை பதிவு செய்துகொள்ளுங்கள்
- விபரங்களுக்கு : 077 653 0236
- ஓவியக்கலைஞர், ஓவியச்சுடர், ஓவியவாரிதி, கலைஞானி, ஆளுநர் விருதுபெற்ற, கலாபூசணம், பொன்னம்பலம் பாலேஸ்வரன் (CAC) (சமாதான நீதிவான்)

குறிப்பு:
பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பத்தில் ஓவியக்கலை பயில விரும்பும் மாணவர்களுக்கு, கிராம சேவை அலுவலரின் சிபார்சுடன், பிரதேச செயலரின் ஒப்பத்துடன் வரும் பட்சத்தில் அவர்களுக்கு விசேட சலுகை அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**விஜயதசமியை முன்னிட்டு வகுப்புகள் ஆரம்பமாகும்.**

விலாசம்:
கே.கே. எஸ். வீதி, 8 ஆம் கட்டை,
கிழக்கு வீதி, தெல்லிப்பளை.

(cs.52372) (N.1)

## பெயர் மாற்றம்

சமரபாகு சல்லியவத்தையில் வசிக்கும் **நிதர்ஷன் சத்தியா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரினை **நிதர்ஷன் சத்தியா** என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் **நிதர்ஷன் சத்தியா** என் கையொப்பமிடுவேன் என இலங்கை சோஷலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**நிதர்ஷன் சத்தியா**

## இலவச மீட்டர் Taxi சேவை

நீங்கள் உங்கள் வாகனங்களுக்கு PickMe Taxi Meter இணைக்க அழைக்கவும்.
(முச்சக்கர வண்டி / CAR / VAN / மோட்டார் சைக்கிள்)

Call / Whatsapp **077 473 7737**

## மணமகள் தேவை

நல்ல குடும்பப் பின்னணியிலுள்ள, 1990 இல் பிறந்த 5'8" உயரமான, MBA, BSc படித்த Bio Medical Engineering, ஆக கொழும்பில் வதிந்து தொழில்புரியும் யாழ். இந்து (V) மணமகனுக்கு 25 -29 வயதிற்குட்பட்ட தகுதியான மணமகள் தேவை.

Whatsapp: **077 308 1905**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உசன் பனங்காட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புபவர்கள் கீழுள்ள இலக்கத்தை தொடர்புகொள்ளவும்.

**077 707 8261**

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறை சந்தியில் தொடங்கப்பட இருக்கும் Stationary, Printing கடைக்கு சுறுசுறுப்பான Type -Setting தெரிந்த வேலை ஆள் தேவை.

Kumar- **077 730 9261**

## கணக்காளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்துக்கு கணக்காளர் தேவை.
(கணினி அறிவு அவசியம்)
தகைமை - A/L

**077 507 8272**

## வீடு வாடகைக்குத் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு சங்கானையில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு: **077 468 2951**
**077 408 3656**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

இல. 34, மாட்டின் லேன், யாழ்ப்பாணத்திலுள்ள வீட்டிற்கு வேலை செய்வதற்கு
**பணிப்பெண் தேவை.**
தங்கி வேலை செய்யக் கூடியவர்களிற்கு முன்னுரிமை உண்டு. தங்குமிடம் மற்றும் 3 வேளை உணவு வழங்கப்படும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

**0759247677**

## வீடு விற்பனைக்கு

மன்னார் நகரில் வயல் வீதி, பெற்றாவில் சம்பத்வங்கிக்கு அருகாமையில் 6.88 பேர்ச் காணியில் அமைந்துள்ள இரண்டு அறைகள், ஒரு சமையலறை, சிறிய விறாந்தை கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது. மலசகூடம், குளியலறை தனியாக உள்ளது. மின் இணைப்பு, தண்ணீர் இணைப்பு உண்டு. விலை 85 இலட்சம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 203 8924, 076 449 9523**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறூட், ரகன் புறூட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்.**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
**K.K.S. வீதி, இணுவில்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

Welding (வெல்டிங்) வேலையாள் கனரக ஓட்டுனர் (Hanter driver - AD Licence)

- விநியோக உதவியாளர்
- கணக்காளர் - Cashier

076 821 9414- Jaffna

## பணிப்பெண் தேவை

மாதகலில் (துறைமுகம்) தங்கி நின்று வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை. (CS52420) (AK-1)

077 501 6255

## வேலை வாய்ப்பு

PickMe Taxi நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் அதிகாரியாக (Marketing Executive) பணியாற்ற ஆள் தேவை. (Full Time / Part Time)

அழைக்கவும்: 077 474 7737

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம் கோவில் வீதியில் தொழில் புரியும், படிக்கும் ஆண்களுக்கு அறை வாடகைக்கு உண்டு.

074 375 8830

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு பராமரிப்பு வேலை செய்வதற்கு 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

075 165 8188



## காணி விற்பனைக்கு

அரியாலை தென்கிழக்கு (நாவலடி) 48 பரப்புக் காணி 12 துண்டுகளான பிரித்து விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் வழங்கப்படும். பரப்பு ஒன்றின் விலை 600,000 /= கடற்கரையிலிருந்து இரண்டாவது காணி 4 1/2 பரப்பு விற்பனைக்கு மொத்தவிலை 4,000,000/= (CS26514) (AK-1)

தொடர்புக்கு : 077 423 5458 / 075 262 7584

## உரும்பிராய் காளியம்பாள் ஆலய மகாசபைக் கூட்டம்

யாழ்., ஒக். 8

உரும்பிராய் ஸ்ரீ காளி அம்பாள் ஆலய மகாசபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு நடைபெறும் என்று மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-66)

## பதவி வெற்றிடம்

யாழ் பிரதான வீதியில் அமையவுள்ள வெளிநாட்டவர்களுக்கும் மற்றும் தமிழ் உறவுகளுக்கும் இலங்கையின் உற்பத்திப் வபாருட்களை விற்பனை செய்யும் Souvenir Central (Pvt) Ltd எனும் வியாபார ஸ்தாபனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. வபண் முகாமையாளர் (Manager – Full Time)
   (ஆங்கிலம் மற்றும் கணினி தொடர்பான அறிவு இருப்பது சிறந்தது.)
2. பகுதி நேரவேலையாளர்கள் -Part Time ( Evenings & Weekends )

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும். (cs 26515) (N.1)

077 478 0421 / 077 188 6719

## Exciting Job Opportunity for Accountancy Professionals!
## Join a leading UK Accounting Firm now expanding its team in Jaffna!

We established our Jaffna branch some time ago and are recruiting additional staff to enhance our dynamic team.

**Candidate Educational Qualifications and Skills Required:**

- An undergraduate degree in the accountancy field.
- Partial qualifications in AAT, CIMA, ACCA, or a related professional field.
- Experience in a UK accountancy practice is desirable.
- Proficiency in both English and Tamil languages.



**Wages** : We offer a competitive salary package based on qualifications and experience.

**Office Location** : Jaffna,Sri Lanka

**Working Hours** : **Monday to Friday - Shifts available: 10 am to 7 pm or 12 pm to 9 pm.**

**How to Apply**: Please send your CV and cover letter to admin@agatax.co.uk.

**Application Deadline**: 25th October 2023

(cs.52398) (N.1)

## காணி விற்பனைக்கு

வவுனியா - பண்டாரிகுளம் அம்மன் கோவிலுக்கு அருகில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

- வீட்டுத் தொகுதிக்கும் - மருத்துவ மனைக்கும் பொருத்தமான இடம்
- புகையிரத நிலையம் - வங்கிகள் - பஸ்டான்ட், மார்கட் என்பன மிக அருகாமையில்.

(Cs 25812) (N.1)

077 755 1193

THE HALO TRUST

450 Thirunagar West, Kilinochchi-Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## Call for Spoken English Teacher
## (3 positions available: temporary contract)

The HALO Trust is the world's largest and oldest international humanitarian mine action non-government organization (NGO). For over thirty years, we have been saving lives and helping war-torn communities recover, by making their land safe. Our mission is to protect lives and restore the livelihoods of those affected by conflict.

HALO has been working in Sri Lanka since 2002 and now has over 1,200 staff working in the Northern Province with offices in Jaffna, Kilinochchi and Mullaitivu. To date, HALO has safely destroyed over one million items of explosive ordnance, including more than 270,000 anti-personnel landmines. HALO and other mine action stakeholders are working to clear Sri Lanka of all known contamination by 2028 to meet Sri Lanka's obligations as a state party to the Anti-Personnel Mine Ban Convention.

In preparation for Sri Lanka reaching mine-free status, HALO and other mine action operators have developed a Staff Livelihood Transition Strategy (SLTS), designed to build vocational skills. As part of the strategy, HALO plans to deliver a **Spoken English Beginner and Advanced course** from **November – December 2023**, with a possibility of extending into 2024. We are looking to deliver **three classes each week in each of our areas of operations**. Each course will consist of **1.5-hour weekly classes,** targeting a total 25 of HALO staff. Spoken English classes will be held every Saturday and we expect the selected service provider to use interactive learning methodologies to engage staff. The service provider must be able to use their own resources and learning curriculum, including regular evaluations to monitor the progress of staff.

We are looking to hire one or multiple tutors to conduct the Spoken English Beginner and Advanced Course across our three areas of operations: **Kilinochchi, Kokkuthoduvai and Muahamlai**. The right candidate(s) will be contracted through a short-term service contract agreement. The selected candidate(s) is subject to meeting the requirements of HALO's compliance and due diligence process.

**Requirements of the position:**

- Bachelor's degree / Diploma in English and English as a Second Language OR
- Ordinary Level "A" grade for English and English as a Second Language
- A minimum of 5 years' experience as an English teacher.
- Ability to plan lessons and keep track of progress.
- Superb verbal and written communication skills in English and Tamil.
- Ability to complete a pre and post course assessment, to measure any improvements in language.
- Good time management skills.
- Effective planning, organization, and problem-solving skills.

**In your application, please state which location (Kilinochchi, Kokkuthoduvai or Muahamlai) you wish to apply for.**

All applications must be submitted to the below address no later than **Friday 13 October 2023**. Only successful applications will be contacted. For further information, please contact 021 228 5466. HALO encourages applicants from all backgrounds to apply for this role. We especially welcome applications from female candidates.

**HR Manager**
**The HALO Trust,**
**450 Thirunagar West, Kilinochchi**
**hr@halosrilanka.org**

## Sponsor / Bank Balancy

வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்க இருப்பவர்களுக்கும் குறைந்த வட்டி வீதத்தில் Bank Balency செய்து தரப்படும் ( 16 வருட நம்பகமான சேவை )

( 3 மாதம் / 6 மாதம் Bank Statement )



New Way Sky International College ( Pvt ) Ltd No . 295, Galle Road, Wellawatte 077 515 1345

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் செல்வி விநாயகமூர்த்தி விஜயதர்சினி அவர்களின் அன்புத் தாய்

### விநாயகமூர்த்தி கமலாதேவி

அவர்கள் காலமனதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.52418) (N.1)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு. முருகேசபிள்ளை கேதீஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தை

### விநாசித்தம்பி முருகேசபிள்ளை

அவர்கள் காலமனதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.52418) B(N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிளாஸ்ரிக்குக்கு எதிராக விழிப்புணர்வுப் பேரணி

## ஹாட்லிக் கல்லூரியால் முன்னெடுப்பு



**யாழ்ப்பாணம், ஒக். 8**

**ஹாட்லிக் கல்லூரியின் 185ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களால் 'பிளாஸ்ரிக் மாசுபாட்டிலிருந்து எமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணி நேற்றுச் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.**

கல்லூரி அதிபர் தம்பையா கலைச்செல்வன் தலைமையில் கல்லூரி வளாகத்திலிருந்து ஆரம்பமாகிய விழிப்புணர்வு நடைபவனி கல்லூரி வீதி, தம்பசிட்டி வீதி ஊடாகப் பயணித்து முலாம் கட்டைச் சந்தியை அடைந்து பருத்தித்துறை பிரதான வீதியூடாக பருத்தித்துறை நகருக்குச் சென்று ஹாட்லிக் கல்லூரியில் நிறைவுற்றது. பேரணியின்போது வழியில் காணப்பட்ட பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்களைச் சேகரித்து தூய்மைப்படுத்தும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பேரணியில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறிசற்குணராஜா, கல்லூரி முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ச-100)



# விபத்தில் இறந்தவரின் நினைவாக மரக்கன்று!

யாழ்ப்பாணம், ஒக். 8

மோட்டார்சைக்கிள் விபத்தில் உயிரிழந்த இளைஞனின் நினைவாக நேற்றுமுன்தினம் மரக்கன்றுகள் நடப்பட்டன.

கடந்த ஆனி மாதம் யாழ்ப்பாணம் கல்லுண்டாய்ப் பகுதியில், நேருக்கு நேர் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம்பெற்ற விபத்தில், இரண்டு சாரதிகளும் உயிரிழந்தனர்.

இதில் உயிரிழந்த அராலி மத்தி, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஜெ.சறோஜன் என்பவரது 29ஆவது பிறந்ததினம் கடந்த வியாழக்கிழமையாகும். அவரது நினைவாக, அவர் விபத்தில் சிக்கி உயிரிழந்த பகுதியில் வீதியோரத்தில் பயன்தரு, நிழல்தரு மரங்கள் நடப்பட்டன. இந்த வேலைத்திட்டமானது அவரது குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டது. (எ-27)

# வர்ணம் தீட்டும் போட்டி

சாவகச்சேரி, ஒக்.8

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வரணி பொது நூலகத்துக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் முன்பள்ளிகளில் தெரிவு செய்யப்பட்ட சிறார்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி எதிர்வரும் 11ஆம் திகதி புதன்கிழமை நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதில் பங்குபற்றும் சிறார்களை உரிய நேரத்துக்கு அழைத்து வரவேண்டும் என்று நூலகர் சி.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார். (எ-9)

# ஹாட்லியின் 185 ஆவது ஆண்டுவிழா 2 ஆம் நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 8

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தால் ஹாட்லிக் கல்லூரியின் 185ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளன.

'பிளாஸ்ரிக் மாசுபாட்டிலிருந்து நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி நாளாகிய இன்று காலை 9 மணிக்கு கிரிக்கெட் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மாலை 6 மணி முதல் பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது. (ம -100)



கீரிமலை சிவபூமி முதியோர் இல்லத்தில் முதியோர்தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகளும், முதியோர் கௌரவிப்பும் அண்மையில் இடம்பெற்றது. (ம-9)

# சிறுவர் மகிழ்வூட்டல்

சாவகச்சேரி, ஒக். 8

சாவகச்சேரி சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்தின் இளங்கோ முன்பள்ளியில் சர்வதேச சிறுவர்தினத்தை முன்னிட்டு சிறுவர் மகிழ்வூட்டல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

பிரிவு கிராமஅலுவலர் ம.அமலதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு விருந்தினராக அயற்பாடசாலை அதிபர் கலந்துகொண்டு சிறார்களுக்குப் பரிசில்களையும் வழங்கினார். சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பாடசாலை நூலக அபிவிருத்தி மற்றும் மொழி இலக்கிய கலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பாடசாலை நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் வழங்கப்பட்டன.

(ய-9)



அண்மையில் பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம்பெற்ற இ.லோகானந்தனின் 'லயத்துக் கோழிகள்' நெடுநாடக ஆற்றுகையின் காட்சி.


(ய)



கிளிநொச்சி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 475 அடி மதில் கட்டுமானத்தின் நினைவுக்கல்லை மருத்துவக் கலாநிதி எம்.குகராஜா அண்மையில் திறந்து வைத்தார். இதற்கான நிதிப்பங்களிப்பை பழைய மாணவர்கள், பெற்றோர் என பல்வேறு தரப்பினர்கள் வழங்கினர்.

(ய -113)





யாழ்.மாவட்டத்தில் வெள்ளி,ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிலையங்களின் கல்வி நடவடிக்கைகளை நிறுத்தி மாணவர்களை அறநெறிக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்கில் யாழ். மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் முன்னெடுத்துள்ள முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் விசேட அறநெறிச் சொற்பொழிவும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வும் குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் பொறுப்பாளர் எஸ்.சிறீதரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. கோப்பாய் சுப்பிரமுனிய கோட்ட முதல்வர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அறநெறிச் சொற்பொழிவை ஆற்றினார். தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(ய -66)




GET UK | CANADIAN | AUSTRALIAN QUALIFICATION
NOW IN JAFFNA MASTERS DEGREE HND DIPLOMA
Health Care
Certificate in Healthcare Assistant
Certificate / Diploma in Care Giving
Hospitality and Tourism
Diploma in Hospitality Management
Certificate in Commercial Cookery
Child Care
Diploma in Early Childhood Development
English Language
Basic English
IELTS
Skills for English (A1 | B1 | B2)
IELTS PTE Skills for English
077 072 9124 HOTLINE
COLOMBO : 011 2 327 121 JAFFNA : 021 2 210 649
JOB OPPORTUNITIES IN SRI LANKA AND UK / CANADA / AUSTRALIA
British Technological Campus
No 01, Level 05, East Lower Block, World Trade Center
Echelon Square, Colombo 01, 00100
No 80, Punkankulam Road, Jaffna

பணிப்பெண் தேவை
திருநெல்வேலியிலுள்ள வீடொன்றில் தங்கிநின்று வீட்டுவேலை செய்வதற்கு தகுந்த பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு: 077 308 3007

திருத்தி கொடுக்கப்படும்
Computer கள் Printer கள் உங்கள் இடத்திற்கு வந்து குறைந்த விலையில் திருத்திக் கொடுக்கப்படும் மற்றும் பழுதடைந்த Computer கள் Laptop கள் நல்ல விலைக்கு வாங்கப்படும்.
தொடர்பு : JIT Solution
077 397 3166

விற்பனைக்கு
ஒரு மணித்தியாலத்திற்கு 200kg கச்சான் உடைக்கக் கூடிய கச்சான் உடைக்கும் இயந்திரம் விற்பனைக்குண்டு.
விலை 350000/-
தொடர்பு : 077 628 0685

வேலைவாய்ப்பு
ரோமானியா
ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும் முன்னணி நம்பிக்கையான திட்டமிடல் நிறுவனங்களுக்காக...!
நேர்முக பரீட்சை அக்டோபர் 11,12,13,14



கம்பி பொருத்தனர் (STEEL FIXER)
சம்பளம்: USD 660 - 770
ஷட்டரிங் தச்சர் (SHUTTERING CARPENTER)
சம்பளம்: USD 660 - 770
விதிமுறைகள் & நிபந்தனை:-
CV Collection only, No Changes for CV & Not Collection Passport
1 USD = Rs.325 ( Subject to change according to the exchange rate)
- மீண்டும் புதுப்பிக்கக்கூடிய 2 வருட ஒப்பந்த காலம்
- இலவச உணவு அலவன்ஸ்
- தங்குமிடம், போக்குவரத்து , மருத்துவ வசதி இலவசம்
- 6 மாத தகுதிகாண் காலம்
- வேலை நாளொன்றுக்கு 8 மணித்தியாலம், வாரத்திற்கு 6 நாட்கள்
- புறப்படுவதற்கும், 2 வருடங்களின் பின் ஒப்பந்தகாலம் பூர்த்தியாகி நாடுதிரும்ப விமான டிக்கட் இலவசம்
- ஏனைய அனைத்து விதிமுறைகள் & நிபந்தனைகள் ரோமானிய தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

இப்பொழுதே பதிவு செய்து கொள்ளுங்கள்.
AL2581/Advt:02/23
உங்கள் விண்ணப்பப்படிவத்தை (CV)ஐ உடன் E-mail செய்யுங்கள்
sriramanan3097@gmail.com
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்:
0766476877 / 0743213260
PEOPLE CONNECT
LIC 2581
"Ceylinco House" 9th Floor West Wing, 69, Janadhipathi Mawatha, Colombo-01, Sri Lanka
+94 112 555 590, +94 112 555 591

நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் சேவை
பெர்ஷிப்பின் கீழ் ஆஷா ஏஜென்சீஸ் லிமிடெட், தி ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா (எஸ்சிஐ) உடன் இணைந்து, இந்தியா, நாகப்பட்டினம் மற்றும் இலங்கை, காங்கேசன்துறைக்கு (KKS ) இடையே எதிர்வரும் 10.10.2023 அன்று பயணிகள் கப்பல் சேவையைத் தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்துள்ளது.



அறிமுக பயணக் கட்டணங்கள்
இரு வழி - ரூபா 53,500/-
ஒரு வழி - ரூபா 27,000/-
யாழ்ப்பாணத்தில் பயணச்சீட்டுகளை கையாள இரண்டு முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்,
1.JAFFNA AIR SERVICES (PVT) LTD.
தொடர்புகளுக்கு : திரு. குலசிங்கம் வசீகரன்,
தொடர்பு இலக்கம் : + 94 70 3788795
முகவரி : 906/23 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
2.சன்ரைஸ் டிராவல்ஸ்
தொடர்புகளுக்கு : திரு.தொண்டமானாபன் திவாகர்,
தொடர்பு இலக்கம் : + 94 76 7602829
முகவரி : பருத்தித்துறை வீதி, ஊரணி, காங்கேசன்துறை.
As agents of The Shipping Corporation of India
Asha Agencies Ltd, (under the PerShip Group)
No 72C Bauddhaloka Mawatha
Colombo 04
Tel : 94114523900


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களவர்களின்...

பாரம்பரிய மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தப்படும் மயிலத்தமடு பிரதேசத்தை விவசாய நடவடிக்கைகளுக்கு வழங்குமாறு கோரி அங்கு அத்துமீறிய பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படும் சிங்கள மக்கள் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கு எதிர்ப்பு வெளியிடும் முகமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மட்டக்களப்பு பயணத்தை முன்னிட்டு 'ரணிலுக்காக நாம் 2024' என்ற மிகப் பெரிய 'கட்-அவுட்' மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையிலான குழுவினர்'கட்= அவுட்டுக்கு' முன்னால் தும்புத்தடியோடு நின்றவாறும் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'அதிபரே கேளுங்கள், சிங்களவர்களை துரத்துகின்றார்கள், சாணக்கியன் தொண்டமான் எமக்கு வேண்டாம், இனவாதம் தூண்ட வேண்டாம்' என்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன் பின்னர், மயிலத்தமடு மேய்ச்சற் தரை கோரிய பண்ணையாளர்களின் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தக் கோரியும் இனிவரும் நாள்களில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலத்தை நிறுத்தக் கோரியும் ஏறாவூர் நீதவான் நீதிமன்றத்தால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தடையுத்தரவானது மயிலத்தமடு கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தின் தலைவர், செயலர், பொருளாளர் உள்ளிட்டவர்களின் பெயர் குறிப்பிட்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த தடையுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மேற்குறிப்பிட்ட ஆர்ப்பாட்டத்தால் அல்லது ஊர்வலத்தால் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் பிரகாரம் சந்தி வெளி பொலிஸ் நிலையத்தால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் சம்மந்தமாக பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளதால் கீழ்வரும் கட்டளையை மன்று பிறப்பிக்கின்றது.

உங்களால் உங்கள் மூலம் ஆர்ப்பாட்டத்தை ஏற்படுத்தக் கூடியவர்களால் உங்களுடன் சேர்ந்து தனிநபர், குழுக்களாக ஒன்றுகூடி சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி முருகன் கோவில் முன்னால் உள்ள வீதியில் போக்குவரத்துக்கு இடையூறாகவோ அல்லது பொதுமக்கள் பிரயாணிகள், அம்புலன்ஸ் வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காது சேதம் ஏற்படுத்துவதையோ பொதுமக்கள் கோவம் கொள்ளும் அளவில் செய்ய வேண்டாம் என இலங்கை தண்டனைச் சட்டக் கோவையிலுள்ள சரத்துக்களின் பிரகாரம் கட்டளை பிறப்பிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை - தங்கள் கால்நடைகளின் பாரம்பரிய மேய்ச்சல் தரையாக விளங்கும் மயிலத்தமடுவில் அத்துமீறிய பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களை அகற்றி அங்கு தமது கால்நடைகளை பாதுகாப்பாக மேய்ப்பதற்கு இடமளிக்குமாறு கோரிய கால்நடை வளர்ப்பாளர்களின் தொடர் போராட்டமானது நேற்றுடன் 23 நாள்களாக இடம்பெற்று வருகின்றது. இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கிப் பங்கேற்றுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், இன்றைய தினம் மிகப் பெரிய கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-26-100)

## மின்கம்பி...

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

அந்தப் பகுதியில் இடம்பெறும் வீதி அகலிப்பு பணியின்போது. வீதியோரத்தில் நின்ற பனைமரம் ஒன்று வெட்டப்பட்டது. அப்போது பனைமரம் மின்சாரக் கம்பி மீது விழுந்தது. இதனால் மின்சாரக் கம்பி அறுந்து வீதியில் நின்ற பெண்ணொருவரின் மோட்டார் சைக்கிள் மீது முட்டியதால், மோட்டார் சைக்கிளில் இருந்த பெண் தூக்கி வீசப்பட்டார்.

அவர் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் ஐந்து மின் கம்பங்கள் முறிந்து சேதமாகின. இதனால் அந்தப்பகுதிக்கு நேற்று பிற்பகல் வேளையில் இருந்து மின்சாரம் தடைப்பட்டது. மின்சார இணைப்பினை சீர் செய்யும் நடவடிக்கையில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டனர். (அ-ஒ-27)

## இஸ்ரேல்...

'ஒபரேஷன் அல்அக்ஸா புயல்' என்ற போர் நடவடிக்கையை சனிக்கிழமை அதிகாலை தொடங்கியுள்ளோம். இஸ்ரேல் மீது 5 ஆயிரம் ரொக்கெட்டுகள் வீசப்பட்டுள்ளன' என்று ஹமாஸின் இராணுவத் தொடர்பாளர் முகமது டெய்ஃப் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை - காசாவிலிருந்து பாலஸ்தீன போராளிகள் ஊடுருவியதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காஸா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது ஏவுகணை ஏவப்பட்டதை அடுத்து, பலஸ்தீன போராளிக் குழுவான ஹமாஸுடன் இஸ்ரேல் 'போரில் ஈடுபட்டுள்ளது' என அறிவித்தார்.

இஸ்ரேல் பலஸ்தீனப் போராட்ட வரலாற்றில் முதன்முறையாக பலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் மீது வான், கடல் மற்றும் தரைவழித் தாக்குதலை நடத்தினர். இஸ்ரேல் மீது சரமாரியாக ஏவுகணைகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, பாராகிளைடர்களைப் பயன்படுத்தி தரை, கடல் மற்றும் வான் வழியாக இஸ்ரேலுக்குள் நுழைந்த காஸா போராளிகளை எதிர்த்துப் போராடுவதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலிய இராணுவ வாகனங்களை கைப்பற்றி அணிவகுத்துச் செல்லும் காணொலிகளால் சமூக ஊடகங்கள் நிரம்பியுள்ளன.

ஊடுருவல்காரர்களுடன் தொடர்ந்து போரிட்டு வருவதால், உயிரிழப்புகள் அல்லது கடத்தல்கள் பற்றிய விவரங்களை தெரிவிக்க இராணுவம் மறுத்து விட்டது. எனினும் 100க்கும் அதிகமான இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. (அ-ஒ-இ)

## ஜனாதிபதி...

உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இணைக்கப்பட்ட நோக்கம் என்பன தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் ஜனாதிபதி செயலகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும் அதனை நிராகரித்துள்ளது. இதே போன்று ஜனாதிபதியின் ஏனைய வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான செலவு விவரங்களையும் வெளியிட ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

மே மாதம் பிரிட்டன், ஜூன் மாதம் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான், அதே மாதத்தில் பிரான்ஸ் மற்றும் பிரிட்டன், ஓகஸ்ட் மாதம் சிங்கப்பூர், செப்ரெம்பர் மாதம் கியூபா மற்றும் அமெரிக்கா, அதே மாதத்தில் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பயணம் மேற்கொண்டிருந்தார்.

'அவரது இந்தப் பயணத்துக்கான ஒட்டுமொத்தச் செலவு எவ்வளவு? அந்தச் செலவுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக (தங்குமிடம், உணவு, விமானப் பயணச் சீட்டு, ஏனைய போக்குவரத்துச் செலவு) தரவும். ஜனாதிபதியுடன் இந்தப் பயணத்தில் எத்தனை பேர் இணைந்திருந்தனர்? அவர்கள் ஒவ்வொருவரும் இணைக்கப்பட்ட நோக்கம் என்ன?' என்ற தகவல் கோரிக்கை ஜனாதிபதி செயலகத்திடம் ஒவ்வொரு பயணத்தின்போதும் முன்வைக்கப்பட்டது.

'5 (1) (ஆ) (ii) மற்றும் 5 (1) (ஆ) (ii) இன்' கீழ் தகவல் கோரிக்கை மறுக்கப்படுகின்றது.

அரசின் பாதுகாப்பையோ, அதன் ஆள்புல இறைமையையோ அல்லது தேசிய பந்தோபஸ்தையோ பாதிக்கும் என்பதையோ அல்லது அத்தகைய தகவல் இரகசியமாகத் தரப்பட்டு அல்லது அதிலிருந்து பெறப்பட்டு உள்ளவிடத்து, ஏதேனும் அரசுடனான அல்லது சர்வதேச சட்டத்தின்கீழ் சர்வதேச உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் தொடர்பில் இலங்கையின் உறவுகளுக்கு பாரதூரமாக பாதகமாகவிருக்குமிடத்து அல்லது அவ்வாறிருக்கும் சாத்தியமுள்ளவிடத்து தகவல் கோரிக்கையை மறுக்க முடியும் என்று மேற்படி சரத்து குறிப்பிடுகின்றது.

இந்தக் காரணத்தை முன்வைத்து ஜனாதிபதி செயலகத்தின் தகவல் அலுவலரும், குறித்தளிக்கப்பட்ட அலுவலரும் தகவல் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சமற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரது வெளிநாட்டுப் பயணச்செலவுகள் தொடர்பான விவரங்கள் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் என்பனவற்றிடம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகக் கோரியபோதும் அது மறுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் மேன்முறையீடு மேற்கொள்ளப்பட்டதற்கு அமைவாக ஆணைக்குழுவின் பணிப்பில்அவைபின்னர் வழங்கப்பட்டிருந்தன.

இந்த விடயத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு சுட்டிக்காட்டியபோதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான செலவு விவரங்கள் 6 தடவைகள் வெளிப்படுத்தப்படாமல் முடக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவில் கடந்த 4ஆம் திகதி ஜனாதிபதியின் பிரிட்டன் பயணம் தொடர்பான செலவு விவரம் வழங்கப்படாமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதி செயலகத்தின் சார்பில் முன்னிலையாக அதிகாரிக்கு, கடந்த காலங்களில் வெளிநாட்டுப் பயணங்களுக்கான செலவு விவரங்கள் வழங்கப்பட்டமையை ஆணைக்குழு சுட்டிக்காட்டியது. இதனையடுத்து அது தொடர்பில் ஆராய்வதாக அவர் பதிலளித்தார். ஆணைக்குழு வழக்கை ஒத்தி வைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் ஐ.நா. சபை அமர்வில் கலந்துகொள்ளச் சென்றபோது அமைச்சர்கள் பலரையும், ஆளும் கட்சி மற்றும் சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் சென்றிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில் ஜனாதிபதி இவ்வாறு மக்களின் பெருந்தொகையான வரிப்பணத்தை வீணடித்துள்ளார். இது தொடர்பான விவரங்களையும் வெளியிடாமல் ஜனாதிபதி செயலகம் இருட்டடிப்புச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## தேர்தல்...

சீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்சவால் இந்த அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தின்படி, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 160 பேர் தொகுதி அளவில் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். எஞ்சிய 65 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேசிய அல்லது மாகாண மட்டத்தில் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ள நிலையில், அமைச்சரவையின் அனுமதியை வழங்குமாறு நீதி அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தற்போதைய அரசமைப்பின் படி, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 196 பேர் விகிதாசார அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். எஞ்சியுள்ள 29 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் வீதத்துக்கு ஏற்ப அந்தந்த கட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். (அ-ஒ-இ)

## வாளுடன்...

பொறுப்பதிகாரி 'உதயன்' பத்திரிகைக்கு தெரிவித்தார்.

காரைநகர் ஊரி களபூமி பகுதியில் சட்டவிரோதமான முறையில் வாளை உடைமையில் ஒருவர் வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், சந்தேகநபரின் வீட்டை முற்றுகையிட்டு சோதனையிட்ட நிலையில் வாளைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து வாளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 28 வயதான இளைஞனை கைது செய்து மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்துள்ளதாக பொலி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-ஒ-125)

## இஸ்ரேலிலுள்ள...

ளது. பலஸ்தீனத்திலிருக்கும் ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்திய நிலையில், இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே போர் மூண்டுள்ளது.

இஸ்ரேலில் சுமார் 8 ஆயிரம் இலங்கையர்கள் வசிக்கின்றனர்.

அவர்கள் தொடர்பில் அவதானமாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன் உயிர்மாய்ப்பு

யாழ்., ஒக். 8

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் தவறான முடிவெடுத்து 24 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் தவறான முடிவெடுத்த அவர் உயிருக்குப் போராடிய நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-27-100)

## வெளிநாட்டுப்...

கடந்த செப்ரெம்பர் மாதம் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்ட பணம் 482.4 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்வடைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொகையானது கடந்த வருடம் 359.3 மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)


### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) 070 701 3060

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ்நகரில் தனி வகுப்பு

ஆண்டு 7 to GCE OL, AL,

பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

### விற்பனைக்கு

இந்தியன்

மின்சார துவிச்சக்கர வண்டி

விற்பனைக்குண்டு.

077 494 9683

### வேலைவாய்ப்பு

நெல்லியடி வண்ணமயில் புடவை கடைக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் / ஆண் விற்பனை உதவியாளர்கள் தேவை.திறமைக்கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

(cs 26555) (N.1)

077 805 2735

### வீடு வாடகைக்குத்தேவை

யாழ்நகரிற்கு அண்மையாக 05 தொடக்கம் 10 அறைகள் கொண்ட சகல வசதியுடனும் கூடிய வீடு வியாபார நடவடிக்கைக்கு தேவை.

076 660 6970

### காணி விற்பனைக்கு

புத்தூர் மேற்கு, நவற்கிரி சந்திக்கு அருகில் 14 பரப்புத் தோட்டம் விற்பனைக்குண்டு. இரண்டு பேர் சேர்ந்து இரண்டாக பிரித்து இரண்டு வீடும் கட்டலாம்.

077 706 6487

### காணி விற்பனைக்கு

புலோப்பளை பளையில் காணி விற்பனைக்குண்டு.

Whatsapp Num. 0044 746 646 4163

### வேலை தேவை

வைத்தியசாலையில் வேலை செய்து ஓய்வுபெற்ற வைத்திய உத்தியோகத்தர் (MBBS) யாழ் நகரப்பகுதியில் தனியார் வைத்தியசாலைகளில் வேலை தேடுகின்றார்.

077 587 5923

### தேவை

கலையம்சத்துடன் கூடிய பழையகால கட்டில்கள், மேசைகள், கதிரைகள் மற்றும் கருங்காலி மரத்திலான மேசை, கதிரைகள் தேவை

தொடர்பு : 077 120 9998

### கால் நடைகள் வளர்ப்போருக்கு

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட பால் கறக்கும் மெசின் (Milking Machine), பால் சேகரிக்கும் கொள்கலன் (Milk Can) 5 லீட்டரில் இருந்து 40 லீடடர் வரையான அளவுகளில் சில்வர் (55304) மற்றும் அலுமினியத்திலாலானவை எம்மிடம் நியாயமான விலையில் உத்தரவாத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



ஆர்க் என்ரபிறைசஸ்

102, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021

A9, வீதி, பரந்தன் சந்தி. 021 228 2020

எழுதுமட்டுவாள் A9, வீதி. 070 191 3571




Hotline: 071 535 7799 / 071 973 9917

### ஆசிரியர் தேவை

பாடசாலை வீதி,

கெருடாவில் தொண்டைமானாறில் இயங்கி வரும்

"சாரதா கல்வி நிலையத்தில்"

தரம் 3,4,5, வகுப்புகளிற்க

கல்வி கற்பிக்க தகுந்த அனுபவமுள்ள ஆசிரியர் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விபரங்களிற்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

(cs 26551) (N.1)

077 500 5110 (Whatsapp, Viber)


## மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 05 - 1942

மறைவு 04 - 10 - 2023

# கனகரத்தினம் பூமணி

வேலணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், 124, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் பூமணி கடந்த (04.10.2023) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆசைமுத்து, தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு அன்னம்மா தம்பதியரின் மருமகளும், கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், பகீரதன் (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்), தயாளினி (பெல்ஜியம்), கிருஷ்ணாளினி (கொலண்ட்), நாகநந்தினி, திருக்குமரன் (குமரன் போட்டோ உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாராணி (சுவிஸ்), பன்னீர்செல்வம் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சிறிதரன் (கொலண்ட்), அம்பிகைபாகன், சுசியந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் பரமேஸ்வரி, இராசமணி, மனோன்மணி, காலஞ் சென்ற தவலிங்கம் ஆகியோரின் சகோதரியும், இராசதுரை, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், பௌசிகன், சாருஜா, காயத்திரி, சுருதி, ஜஜிந்திரன், சிருஜிகன், டக்ஷிகன், துவாரிசா, சுபானுஜன், திவானுஜன், டினுஜன், கரிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை 124, பலாலி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தொடர்புகளுக்கு :


மகன் - 077 722 2601

மகள் - 077 553 7601

தகவல் : குடும்பத்தினர்

(CS 52405) (AK-1)

## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 30 - 04 - 1972

இறப்பு 06 - 10 - 2023

நெளுக்குளம் வவுனியாவை பிறப்பிடமாகவும் இந்தியா சென்னை வழசரவாக்கத்தில் வசித்தவரும் தற்பொழுது ஜேர்மன் (Frank Furtammain) இல் வசித்து வந்தவருமாகிய

# கந்தையா மிதுலன்

அவர்கள் கடந்த (06.10.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

கருணை மிகு உள்ளத்தினால்<br>
கண் போல எமை வளர்த்து<br>
கண்குளிர அனைவரையும் கபடமற்று உபசரித்து<br>
கல கலக்கும் உங்கள் குரலோசை கலந்திருந்த<br>
எமதில்லம் கடுகதி வேகத்தில் உம்மை<br>
கவர்ந்து போனான் காலனவன்<br>
கலங்கி நிதம் தவிக்கின்றோம் கண்குளிர காணவென.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

குடும்பத்தினர்.

நெளுக்குளம், வவுனியா.

077 610 9094

077 923 6578

(CS 25613) A-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காகவே!
— மு.மேத்தா

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 21 ஞாயிற்றுக்கிழமை (08.10.2023) சிகரம் : 168



# அரோகரா போராட்டம்?

நிலாந்தன்

ஒரு நீதிபதிக்கு நீதி கேட்டுத் தமிழ் மக்கள் ஒன்று திரளும் வாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. கடந்த வாரத்திலிருந்து தமிழ்ப் பகுதிகளெங்கும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் குறிப்பாக கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட மனிதச் சங்கிலிப் போராட்டத்தைக் குறிப்பிடவேண்டும். இது குத்துவிளக்குக் கூட்டணியால் ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும் ஏனைய கட்சிகளும் அதற்கு ஆதரவைக் காட்டின. அந்தப் போராட்டம் சரியான நேரத்தில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது சொந்த மக்களின் கவனத்தையும், உலக சமூகத்தின் கவனத்தையும் ஈர்க்கத்தக்க விதத்தில் பிரமாண்டமானதாக முன்னெடுக்கப்பட்டதா?

மருதனார் மடத்திலிருந்து தொடங்கி யாழ்ப்பாணம் வரையிலும் மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டது. போராட்டத்தில் இணையுமாறு துண்டுப்பிரசுரங்கள் பொது மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன. எனினும் அது ஒரு நீண்ட மனிதச் சங்கிலிப் போராட்டமாக அமையவில்லை. மனிதச் சங்கிலி தொடர்ச்சியானதாக அமையவில்லை. கொக்குவில் சந்தியில் கட்சித் தலைவர்களும் செயற்பாட்டாளர்களும் சட்டத்துறையைச் சேர்ந்தவர்களும் முழந்தாளிட்டு நீதிதேவதையிடம் முறைப்பாடு செய்தார்கள். அங்கே அரோகரா கோஷமும் எழுப்பப்பட்டது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தன்பங்குக்கு ஒரு மனிதச் சங்கிலிப் போராட்டத்தைச் செய்தது. இரண்டு மனிதச் சங்கிலிகளுக்கும் இடையே தொடுப்பு இருக்கவில்லை.

இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் அங்கே காணப்பட்டார்கள். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காணவில்லை. முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினரும் உள்ளூராட்சி சபைகளைச் சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரும் அங்கே காணப்பட்டார்கள். சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் அதிகரித்த அளவில் பங்குபற்றவில்லை. சிவில் சமூகங்களும் குறைவு. பல்கலைக்கழக மாணவர்களைக் காணவில்லை. கட்சி ஆதரவாளர்கள்கூட முழு அளவுக்குப் பங்குபற்றியதாகத் தெரியவில்லை.

அப்படி ஒரு போராட்டத்தை முதலில் சிந்தித்த கட்சிகள் அதைக் குறித்து நடைமுறைச் சாத்தியமான வழிகளில் திட்டமிட்டிருக்கவில்லையா? அது மிக எளிமையான ஒரு கணிதம். மருதனார்மடத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையிலுமான மொத்தத் தூரத்தைக் கணக்கிட்டு அவ்வளவு தூரத்துக்கும் கைகோர்த்தபடி நிற்பதற்கு எத்தனை பேர் தேவை என்பதை கண்டுபிடித்திருக்கலாம். அதன்பின் அந்தத்தூரத்தைப் பங்கு கொள்ளும் கட்சிகளின் தொகையால் பிரித்து, ஒவ்வொரு கட்சிக்கும் இத்தனை கிலோமீற்றர் என்று பிரித்துக் கொடுத்திருக்கலாம். அதன்படி ஒவ்வொரு கட்சியும் தனக்குரிய தூரத்துக்கு வேண்டிய ஆட்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தாலே போதும். மனிதச் சங்கிலி வெற்றிகரமானதாக அமைந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. துண்டுப் பிரசுரத்தைக் கொடுத்தால் மக்கள் வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? ஆனால் இது போன்ற மக்கள் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு தேவையான அடிமட்டக் கட்டமைப்புகள், வலையமைப்புகள் கட்சிகளிடம் குறைவு என்பதைத்தான் போராட்டம் மீண்டும் ஒரு தடவை உணர்த்தியது.

தாங்கள் அழைத்தால் மக்கள் வருவார்கள் என்று கட்சிகள் நம்பினவா? எந்த ஒரு போராட்டத்துக்கும் வீட்டு வேலை அவசியம். எல்லாவற்றையும் கணிதமாகக் கணக்கிடலாம். அதில் எங்கேயும் கற்பனையான எதிர்பார்ப்புகளுக்கு இடமில்லை. கடந்த சில தசாப்தங்களாக தமிழ் மக்கள் மத்தியில் வெற்றி பெற்ற எல்லாப் போராட்டங்களின் பின்னணியிலும் கடுமையான உழைப்பு இருந்திருக்கிறது. ஒன்றிணைவு இருந்திருக்கிறது. மக்கள் தாமாகத் திரள்வதற்கு இது ஒன்றும் கோவில் திருவிழா அல்ல. அல்லது பண்டிகைக்காலச் சந்தையும் அல்ல. கட்சிகள் தங்களுடைய கீழ்மட்ட வலையமைப்புகள் ஊடாக மக்களைத் திரட்டிக் கொண்டுவரவேண்டும். ஆனால் கடந்த புதன்கிழமை அது நடந்ததாகத் தெரியவில்லை.

போதாக்குறைக்கு போராட்டத்தின் முடிவில் கொக்குவில் நீதிதேவதையிடம் முழந்தாளிட்டு மன்றாடப்பட்டது. முழந்தாளிட்டு மன்றாடுவது போராட்டமாகிவிடாது. அதைத் தேவாலயங்களில் செய்யலாம். சில ஆண்டுகளுக்கு முன் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு நினைவு கூர்தல் நிகழ்வில் அவ்வாறு முழந்தாளிட்டு நின்றதாக ஞாபகம். அமெரிக்காவில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கறுப்பினத்தவர் பொலிஸாரால் கொல்லப்பட்டதையடுத்து போராட்டங்கள் வெடித்தன. அதன்போது அமெரிக்க பொலிஸ் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரிடம் மன்னிப்புக் கேட்கும் விதத்தில் ஒரு காலில் முழந்தாளிட்டு அமர்ந்து மன்னிப்புக் கேட்டது. அது மன்னிப்புக் கேட்பது. போராட்டம் அல்ல. ஆனால் கொக்குவில் நடந்தது ஒரு போராட்டம்.

தமிழ் மக்கள் ஆலயங்களில் மன்றாடியிருக்கிறார்கள். ஆனால் அரசியல் காரணங்களுக்காக மன்றாடவில்லை. வீரமாகப் போராடியிருக்கிறார்கள். விதி திரைப்படத்தில் நீதிமன்றக் காட்சியில் கதாநாயகி சுஜாதா தனது தர்க்கத்தை முன்வைத்த பின் அழுது மன்றாடி மயங்கி விழுந்து நீதி கேட்கின்றார். ஆனால் நீதிக்காகப் போராடும் மக்கள் அப்படியெல்லாம் மன்றாட முடியாது. பைபிளில் ஒரு வசனம் உண்டு "நீதியின் கிரீடம் முட்களாலானது" என்று. நீதிக்கான போராட்டம் அத்தகையதுதான்.

கண்ணகி தன் கணவனுக்கு நீதி கேட்டு பாண்டிய மன்னனிடம் மன்றாடவில்லை. அவளுடைய கோபம் பாண்டியனைக் கொன்றது மதுரையைச் சுட்டெரித்தது. சாவித்திரி தன் கணவனைக் காப்பாற்றுவதற்காக யமனோடு அதாவது மரணத்தோடு போராடினாள். இவை காப்பியகால உதாரணங்கள். போராட்டங்கள் மன்றாட்டங்களாக இருக்கமுடியாது. அவை வீரமானவைகளாகவும் அர்ப்பணிப்புக்குத் தயாரானவைகளாகவும் இருக்க வேண்டும். நவீன காலத்தில் தமிழ்மக்கள் மன்றாடி எதையும் பெறவில்லை. போராடித்தான் பெற்றார்கள். பதின்மூன்றாவது திருத்தமே தமிழ்மக்களின் போராட்டத்தின் விளைவுதான். ஆனால் தமிழ்க்கட்சிகள் நோகாமல் போராடப் பார்க்கின்றனவா? அல்லது கடமைக்குப் போராடுகின்றனவா? அல்லது 2009க்குப் பின்னரான அறவழிப் போராட்ட வடிவத்தை குறித்துத் தமிழ்க் கட்சிகளிடம் படைப்புத்திறன் மிக்க தரிசனம் எதுவும் கிடையாதா?

போதாக்குறைக்கு போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் கோஷம் எழுப்பும் போது ஒவ்வொரு கோஷத்தின் முடிவிலும் "அரோகரா" சொல்லப்பட்டது. அரோகரா என்றால் என்ன? அரன் சிவன் ; ரோகம் துன்பம், தீவினை, வலி; அரஅறுக்க. " சிவனே ரோகம் அறுக்க" என்றும் பொருள்படும். அரோகரா முதலில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் பயன்படுத்தப்பட்டது என்று ஒரு தகவல் உண்டு.

திருஞானசம்பந்தர் ஒருமுறை பல்லக்கில் அமர்ந்து பயணம் செய்யும்போது, அவரைச் சுமந்து கொண்டு வந்தவர்கள் 'ஏலேலோ ஏலேலோ' என்று களைப்பைக் குறைப்பதற்காக பாடிக்கொண்டு வந்தனர். அதைச் செவிமடுத்த திருஞான சம்பந்தர், பொருளற்ற ஒன்றைச் சொல்வதைவிட பொருளோடு ஒன்றைச் சொன்னால் நல்லது என்று, 'அர ஹரோ ஹரா' என்பதைக் கற்றுக் கொடுத்தார். அதன்பிறகு 'அர ஹரோஹரா' என்றுச்சொல்வது வழக்கமாயிற்று என்று ஒரு தகவல் உண்டு. அது மருவி அரோகரா ஆயிற்று

அரோகரா என்ற சொல் மங்கலமானது. நேர்க்கணியமானது. திட்டுவதற்கும் சபிப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு சொல் அல்ல. ஆனால் கடந்த புதன்கிழமை கொக்குவிலில் அரோகரா எப்படிப் பயன்படுத்தப்பட்டது? "நாடாளுமன்றத்துக்கு அரோகரா…நீதிபதிக்கு அரோகரா…நீதித்துறைக்கு அரோகரா….ஜனாதிபதிக்கு அரோகரா….சிறிலங்காவுக்கு அரோகரா"… என்றால் என்ன பொருள்?

பண்பாட்டு ரீதியிலான சடங்குகளை, மத நம்பிக்கைகளை போராட்டங்களில் இணைப்பது ஓர் உத்தி. அது ஒரு மக்கள் கூட்டத்தை உணர்வுபூர்வமாக இணைப்பதற்கு உதவும். ஈழப்போராட்டத்தின் முதலாவது தெரு நாடகம் "விடுதலைக் காளி" அது கலையாடிக் குறி சொல்லும் மத நம்பிக்கையை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்பட்டது. கடந்த ஆண்டு அரகலயவின்போது சிங்களச் செயற்பாட்டாளர்கள் அவ்வாறான மகத்தான புத்தாக்கத் திறனை வெளிப்படுத்தினார்கள். தமிழ்க் கட்சிகள் அங்கிருந்துகூட எதையும் கற்றுக் கொள்ளவில்லையா? தமிழ்க் கட்சிகளின் கற்பனை வறட்சியை தமிழ்க் கட்சிகளுடைய அரோகராப் போராட்டம் காட்டியதா?

ஒரு போராட்டத்தில் படைப்புத்திறன் எங்கே வெளிப்படுகிறது என்றால் போராடுபவர்கள் அந்தப் போராட்டத்துக்கு ஆகக் கூடிய பட்சம் உண்மையாகவும் அர்ப்பணிப்போடும் இருக்கும் போதுதான். மக்களை நேசித்த எல்லாப் போராட்டங்களிலும் படைப்புத்திறன் அற்புதமாக வெளிப்பட்டிருக்கிறது. உலகம் முழுவதும் அதற்கு உதாரணங்களைக் காட்டலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ்க் கட்சிகளால் அவ்வாறான படைப்புத்திறனை வெளிப்படுத்த முடியவில்லை. ஏன்?

2009இல் இறுதிக்கட்டப் போரின்போது தமிழ்நாட்டில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தை இங்கே சுட்டிக்காட்டலாம். அது மிக நீண்டது; பிரமாண்டமானது. கொட்டும் மழைக்குள் நனைந்து தோய்ந்த ஆடைகளில் நீர் சொட்டச் சொட்ட மனிதர்கள் சங்கிலிகளாகப் பிணைந்து நின்றார்கள். ஆனால் கடந்த புதன்கிழமை நடந்தது அத்தகையது அல்ல. அது ஓர் அறுந்த சங்கிலிப் போராட்டம். அடுத்ததாக ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடப்போவதாக ஏழு கட்சிகள் கூடி முடிவெடுத்திருக்கின்றன. ஆயின், தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு நோகாத போராட்டங்களைத்தான் தெரிந்தெடுக்கிறார்களா? ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் சீனாவுக்கு செல்வது ஏன்?



## இலங்கையைச் சுற்றி மேற்குநாடுகள் வகுக்கும் வியூகங்கள்

## கடன் பொறிக்குள் கொழும்பு

## எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பில்லை

## வருமானத்தை அதிகரிக்க இனப்பிரச்சினையைத் தீர்க்க பரிந்துரை

அ.நிக்ஸன்

சீனாவைக் கடந்து இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் விடயத்தில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாடுகள் முற்படுவதாகத் தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் உதவிகளை எந்த வழியிலாவது பெற முற்படுகிறார். அதேநேரம் சீனாவிடமும் இருந்து அதிகளவு நிதியைப் பெறும் முயற்சிகளும் தீவிரமாக இடம்பெறுகின்றன. அமெரிக்கச் செய்தி ஊடகமான புளும்போர்க் (Bloomberg) தகவலின் பிரகாரம், ரணில் சீனாவிடம் சென்று உதவிகளைப் பெறுவதைவிடவும் அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து நிதியுதவிகளைப் பெறுவதே மேலானது என்ற தொனி தென்படுகின்றது.

இந்தப் பின்னணியோடுதான் ஐ.எம்.எப். எனப்படும் சர்வதேச நாணயநிதியமும் இலங்கைக்கு வழங்கவிருந்த இரண்டாம் கட்ட நிதியுதவிகளை வழங்க முடியாதென அறிவித்திருக்கலாம் என்ற சந்தேகங்கள் ரணில் அரசாங்கத்திடம் மேலோங்கியுள்ளன. இலங்கைத்தீவு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த ஆண்டு எந்த ஒரு தேர்தலையும் நடத்த முடியாதென அதிகாரபூர்வமற்ற முறையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.எம்.எப்.பின் நிதி வழங்கல் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையை அவதானித்தே தேர்தல் பற்றித் தற்போதைக்குச் சிந்திக்க முடியாதென்ற கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ளது போல் தெரிகிறது. கொழும்பில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

சர்வதேச நாணயநிதியம் முன்வைக்கும் பரிந்துரைகளை அரசியலாக்கி குழப்பவேண்டாம் என்றும், கட்சி அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்குரிய பொதுப் பொறிமுறை ஒன்றை வகுத்துச் செயற்படவேண்டுமெனவும் ஐ.எம்.எப். பிரதிநிதிகள் கேட்டுள்ளனர் என உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக அதிகாரபூர்வமாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐ.எம்.எப். உம் எதுவுமே கூறவில்லை. சந்திப்பு இடம்பெற்றதாக மாத்திரமே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐ.எம்.எப். உடனான சந்திப்பில் ரணில் அரசாங்கம்மீது எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியதுடன் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என ஐ.எம்.எப். பிரதிநிதிகளிடம் உறுதியளித்ததாகச் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார்.

அதாவது நிலையான அரசாங்கம் ஒன்று அமைய வேண்டிய அவசியத்தை சஜித் வலியுறுத்தியிருக்கிறார். சர்வதேச நாணய நிதியத்தின் உதவித் திட்டங்களை ஜே.வி.பி.யும் மறுக்கவில்லை. ஆனால் பரிந்துரைகளைச் செயற்படுத்த நிலையான அரசாங்கம் தேவை என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியிருக்கிறது. ஐ.எம்.எப். பிரதிநிதிகளைப் பொறுத்தவரை உள்ளூர்க்கட்சி அரசியல் போட்டிகளுக்கு இடமளியாமல் பொருளாதார மீட்சிக்கான பொதுப்பொறிமுறை பற்றியே அதிகளவு கவனம் செலுத்தியிருக்கின்றனர். குறிப்பாகத் தமது பரிந்துரைகளை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கக் கூடாது என்பது ஐ.எம்.எப். பிரதிநிதிகளின் எதிர்பார்ப்பு.

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பினாலேயே இலங்கை தொடர்ந்து ஆபத்தான பொருளாதாரப் பாதையில் சென்றுகொண்டிருப்பதாக ஐ.எம்.எப்.கருதுகின்றது. விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் (Extended Fund Facility EFF) ஒரு பகுதியாக இலங்கையின் பொருளாதாரம் மற்றும் நிர்வாகத்தின் மீதான சர்வதேச நாணயநிதியத்தின் சமீபத்திய மதிப்பாய்வு, இலங்கைத்தீவில் எதுவுமே சரியாக இல்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட இலங்கைத்தீவு மக்கள் தற்போது பொய்யான பாதுகாப்பு உணர்வை எதிர்கொள்வதாகக் கடன் வழங்கும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் கருதுவதாக த மோர்னிங் (themorning) என்ற ஆங்கில செய்தித் தளம் கூறுகிறது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் தான், EFF திட்டத்தின் கீழ் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை மீளாய்வு செய்த ஐ.எம்.எப். பிரதிநிதிகள் இரண்டாவது தவணைக்குரிய நிதியை வழங்குவது பற்றி அறிவிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். வருமானம் ஈட்டும் இலக்குகள் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஆகிய இரண்டு முக்கியமான பகுதிகள் குறித்து ஐ.எம்.எப். கவலை வெளியிட்டுள்ளது.

வருமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள் ஐ.எம்.எப். உடன் தற்போது நடந்து கொண்டிருக்கும் வேளையில், ரணில் இந்த மாத நடுப்பகுதியில் சீனாவுக்குப் பயணம் செய்வதில் கவனம் செலுத்தியுள்ளார். சீனாவிடம் இருந்து சில உறுதியான உதவிகளை ரணில் பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சீனா முழுமையான ஆதரவை வழங்கும் என்றும், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதாரச் சவால்களை வெற்றி கொள்ள சீனா உதவும் எனவும் ரணில் நம்புகிறார் போல் தெரிகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையான 330 மில்லியன் டொலர் வழங்கப்படக்கூடிய நிலைமை இல்லை என்பதை அறிந்த பின்னணியிலேயே ரணில் சீனாவிடம் சரணடைந்திருக்கவேண்டும்.

முதற் கட்டக்கணிப்புகளில் இருந்து 15% வருமானம் பற்றாக்குறையாகவுள்ளது. வருமான நோக்கங்களை நிறைவேற்றுவது வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பது குறித்து இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கு கூடுதல் கால அவகாசம் தேவைப்படும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான மூத்த தூதுவர் பீட்டர் ப்ரூயர் தெரிவித்துள்ளார். 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமானத்தில் 12% என்ற நோக்கத்தை எட்டுவது மற்றும் அடுத்த ஆண்டு மற்றொரு பற்றாக்குறையைத் தவிர்ப்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் சில புதிய வரிச் சீர்திருத்தங்களை ஐ.எம்.எப். பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் 2019 ஆம் ஆண்டு செய்யப்பட்ட வரிக் குறைப்புகளை மாற்றியமைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்ட வரிச்சீர்திருத்தங்கள் வருமானத்துக்கும் செலவினத்துக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கப் போதுமானதாக இல்லை எனவும் பீட்டர் ப்ரூயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கிடையே அமெரிக்காவுடன் இலங்கையின் நிதி நிலைமை குறித்துப் பேசி மேலும் சில அலோசனைகளைப் பெறமுடியுமென ஐ.எம்.எப். நம்புவதாக ரொய்ட்டர் செய்திச்சேவை தெரிவித்துள்ளது. ஐ.எம்.எப். பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர், ஜனாதிபதி ரணில் , செப்ரெம்பர் 26 ஆம் திகதி ஜேர்மனிக்குச் சென்றிருந்தார். அங்கு இடம்பெற்ற 'பேர்லின் குளோபல் உரையாடலில்' ஜனாதிபதி கலந்து கொண்டார். ஜேர்மன் ஜனாதிபதி ஓலாஃப் ஷோல்ஸையும் ரணில் சந்தித்தார். இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தைப் பற்றிப் பேசியதுடன் இலங்கையின் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு பரிஸ் கிளப்பின் உதவியைப் பெறுவதற்கு ஜேர்மன் அரசின் ஆதரவை ரணில் கேட்டிருந்தார். ஆனால் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர பரிஸ் கிளப், ஒக்ரோபர் மாதக் கடைசி வரை கால அவகாசம் கேட்டுள்ளது.

பரிஸ் கிளப்பின் ஒத்துழைப்பைப் பெற்று இலங்கையின் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர ரணில் ஜேர்மனியில் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. ஆனாலும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனை அணுகுவது குறித்தும் ரணில் பரிசீலிக்கிறார். இருந்தாலும் அந்த அணுகுமுறையும் வெற்றியளிக்குமா என்று கூற இயலாது.

இந்தப் பின்புலத்திலேதான் ரணில், இம்மாத நடுப்பகுதியில் சீனாவுக்குப் பயணம் செய்யவுள்ளார்எனத் தெரிகிறது.

ஆனால் இங்கே வேடிக்கை என்னவென்றால், கடன் மறுசீரமைப்புத் தொடர்பாக ரணில் அக்கறை செலுத்தி வரும் நிலையில் அதற்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சிகள் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளன. பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோரால் இந்த மனு செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை உருவாக்குவதில் சீனாவுக்குப் பெரும் பங்களிப்பு உண்டு. அத்துடன் இலங்கையின் பொருளாதார எதிர்காலத்தின் நிலைத்தன்மையிலும் சீனா முக்கியமான பங்கு வகிக்கிறது. பலதரப்பு நிதியளிப்பவர்கள் உட்பட இலங்கைக்கான அனைத்து கடன் வழங்குநர்களும் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் உள்வாங்கப்படவேண்டும் என்று சீனா எதிர்பார்க்கிறது. கடன் மறுசீரமைப்புத் திட்டத்தில் கடன் வழங்குநர்கள் ஏன் இணையமுடியாது என்ற கேள்வியையும் சீனா முன்வைத்திருக்கிறது. ஆனால் சீனாவைக் கடந்து மேற்கு மற்றும் ஐரோப்பியக் கடன் வழங்குநர்களிடம் இலங்கை வரவேண்டும் என்ற அழுத்தங்கள் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ளதையே அவதானிக்கமுடிகிறது. ரணில் கடும் அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் வழக்குத் தொடுத்தமை என்பது பொதுமக்களின் பாதுகாப்புக்காகவே என ஹர்ஷ டி சில்வா கூறுகிறார். குறிப்பாக வங்கிகளில் வட்டி வீதங்கள் குறைக்கப்படுவதால் அரச மற்றும் தனியார்துறை ஊழியர்கள் பாதிக்கப்படுவார் என்ற வாதத்தை அவர் முன்வைத்திருக்கிறார். ஆகவே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளாக இருக்கலாம் அல்லது இந்தியா,சீனாவாக இருக்கலாம் அவை இலங்கைக்குக் கடன் கொடுத்து மீள முடியாத நிலைமைக்குள் நாட்டைக் கொண்டு செல்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தின் மூலம் வங்கிகளில் வட்டி வீதக்குறைப்பும், அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட சகல சேவைகளுக்குமான வரி அதிகரிப்புகளும் பொதுமக்களுக்குப் பெரும் ஆபத்து. ஆனால் இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிப்பதற்கான மாற்றுத்திட்டங்கள் அரசாங்கத்திடமோ எதிர்க்கட்சிகளிடமோ இல்லை. வரி அதிகரிப்புகளைத் தவிர்த்து இலங்கைத்தீவின் வருமானத்தை அதிகரிக்க இனப்பிரச்சினை முதலில் தீர்க்கப்படவேண்டும்.

நல்லிணக்கம் ஊடாகவே பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று ஐ.எம்.எப். மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் அவ்வப்போது பரிந்துரைத்தபோதும், அதனை ஏற்றுச் செயற்படுத்த வேண்டும் என்ற மனநிலை சிங்கள அரசியல் தலைவர்கள் எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதனைப் பகிரங்கப்படுத்தச் சிங்கள ஆங்கில ஊடகங்களும் தயாராக இல்லை என்பதுதான் ஆகப்பெரும்வேதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர்க்கு விருந்தளித்த முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

ஈழ நாட்டின் கல்விப் பாரம்பரியம் மிக்க ஊர்களிலே வட்டுக்கோட்டைக்கு குறிப்பிடக்கூடிய முக்கியத்துவம் உண்டு. இந்த ஊரிலே நீண்ட நெடுங்காலமாகவே திண்ணைப்பள்ளிகள் தமிழ்க் கல்வியையும் சைவத்தையும் வளர்த்து வந்தன. இந்தத்திண்ணைப் பள்ளிகள் தமிழ்ப் புலமைமிக்க பலரை உருவாக்கின. கணக்காயர்களாகவும் கல்வியாளர்களாகவும் விளங்கிய பலர் அவ்வப்போது ஆலயங்களின் பெயரில் ஊஞ்சல் பதிகம் முதலியவற்றைப் பாடியுள்ளனர். வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி அம்மன் ஊஞ்சல் ஒல்லாந்தர் காலத்திலே பாடப்பட்டமை குறிப்பி டத்தக்கது.

திண்ணைப் பள்ளிகளும் மரபுவழிக் கல்வியும் செழித்து வளர்ந்த ஊர்களிலேயே முதன் முதலில் மிஷனரிமார் பாடசாலைகளை நிறுவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. வட்டுக்கோட்டை செமினரி இந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. வட்டுக்கோட்டையிலே கல்விப் பாரம்பரியம் மாத்திரமன்றிக் கலைப் பாரம்பரியமும் சிறப்புற்றுக் காணப்பட்டது. வட்டுக்கோட்டையில் நிலவிய கூத்துமரபு (ஆட்ட மரபு) ஈழ நாட்டின் தனித்துவமான ஆடல் மரபுகளில் ஒன்று என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆட்டக்கூத்து, புரவியாட்டம் இன்றும் வட்டுக்கோட்டையில் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை நேரிலே பார்க்கும் வாய்ப்பு நிறையவே கிடைத்தது.

கலை மரபும் கல்வி மரபும் செழித்து வளர்ந்த குடும்பப் பின்னணியிலேதான் 1896 ஆம் ஆண்டு முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி பிறந்தார். இவரின் தந்தையார் முருகப்பிள்ளை திண்ணைப்பள்ளி ஆசிரியராகவும் சைவாசாரசீலராகவும் விளங்கியவர். இவரின் தாயாரின் பெயர் தங்கம்மையார். பதினொரு வயதிலே நல்லதம்பி தந்தையாரை இழந்தார். தந்தையாரின் மரணத்தின்பின் உறவினரான நாகலிங்க உபாத்தியாயரின் அரவணைப்பிலே இருந்து படித்து வந்தார். ஆரம்பக் கல்வியை வட்டுக்கோட்டையில் பெற்ற இவர் தெல்லிப்பழையிலே உயர் நிலைக் கல்வியைப் பெற்றார். 1975 ஆம் ஆண்டு பயிற்றப் பட்ட தமிழாசிரியாக வெளியேறினார். இயல்பாகவே கவி புனையும் ஆற்றல் கைவரப்பெற்ற நல்லதம்பி மண்டைதீவு, ஆனைக்கோட்டை முதலான இடங்களிலிருந்து தமிழ்ப் பாடசாலைகளிலே ஆசிரியராகப் பணியாற்றியபின் 1918 ஆம் ஆண்டு கொழும்பு சாஹிராக் கல்லூரியிலே ஆசிரியராக அமர்ந்தார். அறிவுத்தாகம் கொண்ட இவருக்குத் தென்கோவை பண்டிதர் வித்தகம் கந்தையாவின் தொடர்பு ஏற்பட்டது. அவரிடம் பழந்தமிழ் இலக்கிய - இலக்கணங்களைப் பாடம் கேட்டு தம் அறிவை வளர்த்துக்கொண்டார். இந்தக்காலப் பகுதியிலே ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுக் கொண்டார். இத்தகைய பின்னணியில்தான் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பியின் புலமையை அணுகவேண்டும். சிறு வயதிலேயே இவர் செய்யுள் இயற்றும் திறன் கைவரப் பெற்றவராக விளங்கினார் எனக் கூறப்படுகிறது. திண்ணைப்பள்ளிச் சூழல் செய்யுள் செய்யும் திறனை வழங்குவது இயல்பானதே. இயல்பாக இருந்த திறனை அக்கால கல்விச்சூழலும் கவிதைச் சூழலும் வளர்த்தெடுத்தன எனலாம். ஈழநாட்டிலே நீண்டகாலமாக வழங்கி வந்த கவிதைமரபு பாரதியின் வருகையுடன் புதிய பாதையிலே பயணிக்கத் தொடங்குகின்றது என்பர். பாரதியின் சம காலத்திலும் சற்று அதற்கு முன்னரும் ஈழத்திலே தமிழ்க் கவிதை சமூகத்தை நோக்கி நகரத் தொடங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

பாரதி குறிப்பிடும் எளிய பதம், எளிய நடை, எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய சந்தம் என்ற வழியிலே இருபதாம்நூற்றாண்டின் முற்பகுதியிலே ஈழத்து தமிழ்க் கவிதை பயணிக்கத் தொடங்கின்றது. தமிழ் நாட்டு இலக்கியச் சூழலின் செல்வாக்கு பல வகையிலும் ஈழநாட்டைப் பாதிக்கத் தொடங்கியது. குறிப்பாக கவிதை என்ற வடிவம் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தியமையை அவதானிக்கமுடிகின்றது.

கல்லூரித் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியமையும் தமிழ் பாட நூல்களை எழுதியமையும் இவரது கவித்துவ ஆற்றலுக்கு மாத்திரமன்றிக் கவிதை பற்றிய நோக்கு நிலைக்கும் உந்துவிசையாக அமைந்தது எனக் கருதலாம். இவரது காலத்து கவிஞர்களது செல்வாக்கு இவரிலும் காணப்படுகிறது. அது தவிர்க்கமுடியாததே.

'இளைஞர் விருந்து' என்னும் கவிதைத் தொகுதி புலவர் இறந்து [1951] ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரே வெளி வந்தது. இதனைத் தொகுத்து வெளியிட்ட வட்டுக்கோட்டை இளைஞர் மன்றம் செய்த பணி மகத்தானது. இந்தத்தொகுப்பினுள் இடம்பெறாத அவரது கவிதைகள் இன்னும் இருந்திருக்கக்கூடும். மரதனஞ்சல் ஓட்டம், இலங்கை தேசிய கீத மொழிபெயர்ப்பு என்பன இவர் வாழ்ந்த காலத்திலேயே இவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றவை ஆகும்.

'இளைஞர் விருந்து' எனும் கவிதைத்தொகுதி ஒன்பது தலைப்புகளிலே அமைந்திருக்கின்றது. இந்தத் தலைப்புக்கள் தொகுப்பாளர்களாலே அமைக்கப்பட்டு இருக்கவேண்டும். ஒருவகைத் தொடர் ஒழுங்கிலே இந்தத்தலைப்புகளை இட்டிருக்கின்றனர். இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலே வெளிவந்த பொரும்பாலான கவிதைத் தொகுப்புகளின் செல்வாக்குக்கு இந்தத்தொகுப்பாளர்களும் உட்பட்டிருக்கின்றனர் எனக் கருதமுடியும்.

தெய்வம், இயற்கை, நாடும் மொழியும், விழாக்கள், நற்பழக்கங்கள், தொழிலும் கல்வியும், பொதுக் கதைப்பகுதி, குழந்தை இன்பம் எனும் தலைப்புகளிலே அமைந்துள்ள 'இளைஞர் விருந்து' கவிஞரின் உள்ளத்து உணர்வையும் கருத்து நிலையையும் உளவியலையும் பெரும்பாலும் பிரதிபலித்துள்ளது. பலதரப்பட்ட மக்களையும் கவிஞர் மனம் கொண்ட போதிலும் சிறப்பாக இளமாணாக்கரையும் சிறுவர்களையுமே பெரிதும் மனதிருத்தி இருக்கிறார் என்று எண்ண முடிகின்றது. இவர் கற்ற சூழலும் கற்பித்த சூழலும் இக்கருத்து நிலைக்கு அடிப்படைக் காரணங்கள் எனக் கருதுவதும் தவறாகாது. கவிதைக்கு ஓசை மிக முக்கியமானது. "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்று பாரதி பாடினான். யாப்புநெறி என்பது ஓசை நெறிதான். முதுதமிழ்ப் புலவர் பல்வேறு யாப்புகளிலும் கவிதைகளை எழுதியமை அவரை யாப்பறி புலவர் என்று நிறுவுகிறது. யாப்பு நெறிக்குள்ளே நின்று தான் சொல்ல வந்த விடயத்தைச் சிறப்பாகச் சொல்லியமையாலேயே அவரை முதுதமிழ்ப் புலவர் என்று உலகம் போற்றுகின்றது. இவரின் கவிதைச் சிறப்பை எல்லாக் கவிதைகளிலும் காணலாம். எனினும் வகை மாதிரியாகத் தொட்டுச்சுவைக்க சில கவிதைகளைச் சுட்டிக் காட்டலாம். தெய்வப் பாடல்கள் பாடுவது அக்காலப் புலமை மரபு. பாரதி, கவிமணி, விபுலானந்தர், சோமசுந்தரப்புலவர் முதலான கவிஞர்கள் தத்தம் நோக்கு நிலைக்கேற்பத் தெய்வங்களைப் பாடியுள்ளனர். முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி கலைமகள் துதியில் வரும் ஒரு கவிதையை தொட்டுச் சுவைப்போம்.

*"நான்முக னாவினிலேவளர்*
*நாமகளே யமுதேதமிழ்த்*
*தேனென்றன் நாவினிலும்நின்று*
*தித்திக்க வேண்டுமடி"*

இயல்பான ஓசையுடன் வரும் இக்கவிதை நாமகளுக்கும் கவிஞருக்கும் உள்ள உறவைச் சுட்டிக்காட்டுகிறது. "தித்திக்க வேண்டுமடி" என்பதில் வரும் "வேண்டுமடி" என்ற தொடர் புலவரைக் கலைவாணியுடன் நெருக்கமாக்குவதற்கு சான்றாகக் கொள்ளக்கூடியது. பக்தியுணர்வுடையவராக விளங்கிய போதிலும் சமூகச் சிந்தனையுடன் [illegible] வெளிப்படுத்தும் கவிதைகள் பல இத் தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன. அக்கால சமூகத்தில் நிலவிய பலியிடல் வழிபாட்டு மரபைப் புலவர் வன்மையாகக் கண்டிக்கிறார். இதற்குச் சிறந்த உதாரணமாக "சின்னம்மன் கோயில் வேள்வி" என்ற கவிதையைச் சுட்டிக்காட்டலாம்.

*"பளிச்சுப் பளிச்சென்று கத்தி மினுங்குதல்*
*பார்த்து நடுங்கிப் பயந்து விட்டேன்உடல்*
*நெளிச்சு நெளிச்சு நடந்தொரு பூசாரி*
*நேரேவந்தான் தலையாடு கண்டான்.*

*பூவை இலையைச் சொரிந்தொரு மந்திரம்*
*போற்றும் புனல்தெளித் துச்சரித்தான் பின்பு*
*தாவி யிருவர் இழுத்துப் பிடிக்கத்*
*தலைக்கிடாய் வெட்டிச் சரித்து விட்டான்"*

வாசிப்பவரின் நெஞ்சம் துணுக்குறும் வகையிலே பலியிடலை காட்சிப்படுத்திப் புலவர் கவிதையாக்கி இருக்கிறார். பளிச்சுப் பளிச்சென்று நெளிச்சு நெளிச்சு முதலான சொற்கள் எதுகை மோனைக்கும் அப்பால் காட்சிப்படுத்தி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. பலியிடலைப் பற்றிப் பதினைந்து பாடல்களைப் பாடியுள்ளார். அதன் இறுதிப்பாடல் பழந்தமிழ்பாடல்களை நினைவூட்டுவதாக அமைகின்றன. இயற்கையை, தொழிலை, தமிழ்மொழியை, தொழிலாளரை எதைப் பாடினாலும் புலவரிடம் ஒரு மனிதாபிமான நோக்கு இருந்தமையை இக்கவிதைத் தொகுப்பினிலே காணமுடிகின்றது.

வட இலங்கையிலும் தென்னிலங்கையிலும் வாழ்ந்த அனுபவ வெளிப்பாடு இவரது கவிதைகளில் பரவி வருவதைக் காணலாம். வகை மாதிரிக்காக வெள்ளவத்தைக் கடற்கரைக் காட்சியைச் சுட்டிக் காட்டலாம். நவநாகரிக நடையுடை பாவனையை நகைச்சுவையுணர்வுடன் வெளிப்படுத்தும் புலவர் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பையும் புலப்படுத்தத் தவறவில்லை. சமூகத்தின் பல்வேறு விடயங்க ளைப் பாடிய இவரின் குழந்தை இன்பம் என அமையும் சிறுவர் பாடல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளிலே ஈழத்தில் குழந்தைப் பாடல்கள் மிக உன்னத நிலையிலே இருந்தன. சோமசுந்தரப் புலவர் உள்ளிட்ட அக்காலத்திலே குழந்தைப் பாடல்களை எழுதியவர்களிற் பெரும்பாலானவர்கள் ஆசிரியர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.

அக்காலத்துக் குழந்தைப் பாடல்களை இன்றும் படிக்கும்போது மகிழ்ச்சி தருகின்றது. குழந்தைகளின் உளவியல், அவர்களின் சொற்களஞ்சியம், அவர்களது சூழல் முதலானவற்றை மனம்கொண்டு முதுதமிழ்ப் புலவர் குழந்தைப் பாடல்களை எழுதினார். வகைமாதிரிக்குச் சில பாடல்களைச் சுட்டிக் காட்டலாம்.

*"பாலரெல்லாம் கூடுவோம்*
*பாட்டு நன்று பாடுவோம்*
*காலைத் தூக்கி ஆடுவோம்*
*கையசைத்தே ஓடுவோம்!*

*"பள்ளிக் கூடம் செல்லுவோம்*
*பாடமெல்லாம் சொல்லுவோம்"*

இதிலே வரும் கூடுவோம், பாடுவோம், ஆடுவோம், ஓடுவோம், சொல்லுவோம்என்னும் சொற்களெல்லாம் குழந்தைக்குப் பரிச்சயமான சொற்களேயாகும்.

பாவைப்பிள்ளை என்னும் பாடல் குழந்தை உளவியலைப் புலப்படுத்துவதாக அமைகின்றது.

*"என்னைப் போலக் காலும்*
*என்னைப் போல கையும்*
*இனிய கண்ணும் வாயும்*
*இயைந் திருக்கும் பாவை"*

*"சட்டையிட்டுப் பார்ப்பேன்*
*தொப்பியிட்டுப் பார்ப்பேன்*
*பொட்டுமிட்டுப் பார்ப்பேன்*
*பூவணிந்து பார்ப்பேன்"*

சிறுவர்களுக்கு இப்பாடல் அக்காலத்திலே ஆசிரியர்களாலே விரும்பிப் படித்துக் காட்டப்பட்டது என்று கூறப்படுகிறது.

குழந்தைப் பாடல்களோடு நீதிநெறி, அன்பு, நற்பழக்க வழக்கம் முதலானவற்றைச் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு கல்வி மரபும் தமிழிலே இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் மரபு. இம்மரபுக்கான ஊற்றுக்கால் எனலாம். முதுதமிழ்ப்புலவர் இந்த மரபைப் பல்வேறு இடங்களிலும் பேணியுள்ளார்.

பாரதி யுகத்தை மனங்கொண்டு வந்த ஈழத்துத்தமிழ்க் கவிஞர் மரபிலே முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பிக்கு அழியாததோர் இடமுண்டு என்பதை அவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.

மிக இளம் வயதிலே இறையடி சேர்ந்த முதுதமிழ்ப் புலவர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்திருந்தால் ஈழத்து தமிழ் கவிதை மரபுக்கு பலம் சேர்த்ததோடு நின்று நிலைக்கும் காவியம் ஒன்றையும் பாடியிருப்பார் என நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ்ப்பாண மாவட்டத்தின் சட்டம், ஒழுங்கு, சமூக நிலைகள் பற்றி யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் ( மனித உரிமைகள் முதுமாணி ( கொழும்புப் பல்கலைக்கழகம்) 'உதயன் - சஞ்சீவிக்கு' வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**



# "யாழ்.மாவட்டத்தில் அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது"

## யாழ்.நகரைக் கண்காணிக்க விரைவில் திட்டம்

## தவறு செய்யும் பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கேன்

நேர்கண்டவர்: ஜெ. சுலக்சன்

**கே: யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய சட் டம், ஒழுங்கு திருப்தியான நிலைமையில் உள்ளதாக எண்ணுகிறீர்களா? நீங்கள் பதவியைப் பொறுப்பேற்க முன்னர் இருந்த நிலைக்கும் தற்போதுள்ள நிலைக்கும் இடையே ஏதேனும் வித்தியாசங்கள் உண்டா?**

ப: தற்சமயம் யாழ்.மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு நல்ல நிலையில் உள்ளது. தரவு அறிக்கைகளை அவதானித்துப் பாரக்கும் போது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் யாழ்.மாவட்டத்தில் குற்றச்செயல்கள் குறைந்துள்ளன.

யாழ். குடாநாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக நான் உட்பட யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் பொதுமக்களின் ஆதரவையும், அக்கறையையும், பெற்று எமது கடமைகளைச் சிறப்பாக செய்து வருகின்றோம். குறிப்பாக, தேசிய பாதுகாப்பைப் பேணுதல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் தீர்த்தல், போதைப்பொருள் தடுப்பு மற்றும் ஊழல் தடுப்பு, போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பு, தேசிய மற்றும் மத ஒற்றுமையை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துதல், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் பொது விடயங்களுக்கு ஆதரவு வழங்கல் என்பவற்றில் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். இதற்காகப் பொலிஸ்மா அதிபர் மற்றும் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தொடர்ந்து அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது நல்ல பாதுகாப்பான சூழல் நிலவுவதால் கடந்த வருடங்களைவிட இவ்வருடம் ஆலயங்களிலும் ஏனைய சமய ஸ்தலங்களிலும் நடைபெற்ற வருடாந்த உற்சவங்களில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டதுடன் வெளிநாடுகளில் இருந்தும் பெருமளவான இலங்கைத் தமிழ் பக்தர்களும் கலந்துகொண்டனர். பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை. யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிநாட்டில் வசிக்கும் பெருமளவிலான மக்கள் யாழ்.பிரதேசத்தை விட்டு வெளியேறும்போது எனது அலுவலகத்துக்கு வருகை தந்து. வாழ்வதற்கு நல்லதொரு சூழல் நிலவுவதாகத் தெரிவித்து நன்றிகளைத் தெரிவித்தனர். நான் மிகவும் விருப்பத்துடன் யாழ்ப்பாண மக்களுக்குச் சேவை செய்து வருகிறேன்.

**கே: ஆனால் அண்மைக்காலமாக திருட்டு, கொள்ளை, போதைப்பொருள் நுகர்வு , கூலிக்காக வாள்வெட்டுச் சம்பவங்கள் போன்றன யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ளனவே. இவற்றுக்கான அடிப்படைக் காரணங்கள் என்னவென இனங்கண்டுள்ளீர்களா?**

ப: யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் திருட்டு. கொள்ளை, போதைப்பொருள் பாவனை, வாள் வெட்டு போன்றவற்றில் எவ்வித அதிகரிப்பும் ஏற்படவில்லை. தரவுகளை அவதானிக்கும் போது இது ஒரு தெளிவான உண்மை. வாள்களைப் பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபடும் அனைவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர், சிலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர், ஆனால் அவர்களின் நடவடிக்கைகள் தொடர்ந்து பொலிஸாரால் கண்காணிக்கப்படுகின்றன. போதைப்பொருள் பாவனையால் தான் திருட்டு மற்றும் கொள்ளைகள் அதிகம் இடம்பெறுகின்றன. அந்த போதைப்பொருள்களை உபயோகிக்க பணம் தேடும் நோக்கத்தில் களவு,கொள்ளைகளில் ஈடுபடுகிறார்கள். குறிப்பாகக் கடந்த காலங்களில் வாள்களைப் பயன்படுத்தி குற்றச்செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவல்களை பகுப்பாய்வு செய்யும்போது மூன்று காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன.

போதைப்பொருள்களை விலைக்கு வாங்குவதற்காக பணத்தைப் பெறுவதற்கான நோக்கங்களின் அடிப்படையில் வெவ்வேறு நபர்களின் தேவைகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் தாக்குதல்கள், மற்றும் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்து அதற்கான பணமும் பெறப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் காணித் தகராறு மற்றும் தனிப்பட்ட பகையைத் தீர்த்துக்கொள்ளப் பணம் கொடுத்து குற்றச்செயல்களில் ஈடுபடுத்துகின்றனர். ஒருவரையொருவர் பழிவாங்கும் நோக்கத்துடன் வாள்களைப் பயன்படுத்தி குற்றங்களைச் செய்பவர்களிடையேயும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

ஆனால் தற்போது அவர்களது நடவடிக்கையை பொலிஸார் கட்டுப்படுத்தியுள்ளனர். தற்போது அத்தகைய குழுக்கள் இல்லை. இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இந்த நடவடிக்கைகள் குறிப்பாக பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகத்தால் (DCDB) மேற்கொள்ளப்படுகின்றன. உத்தியோகத்தர்கள் வெற்றிகரமாக பணியமர்த்தப்பட்டுள்ளதால், பொதுமக்கள் எந்தவித இடையூறும் இன்றி பாதுகாப்பாக வாழ்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்க அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள்.

**கே: நீங்கள் பதவியேற்ற பின்னர் யாழ். மாவட்டத்தின் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதில் என்னென்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? அதன்போது எதிர்நோக்கும் சவால்கள் எவை?**

ப: யாழ். மாவட்டத்தில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இரகசியத் தகவல்களின் அடிப்படையில் குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள். மேலும் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் குற்றத் தடுப்புப் பிரிவுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் (DCDB) சிறப்பு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு, குற்றவாளிகளை சட்டப்படி பிடிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அதற்காக, அவ்வப்போது சிறப்பு பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக குறுகிய காலத்தில் அவுஸ்திரேலியா பெடரல் பொலிஸ் (AFP) ஊடாக பயிற்சி வழங்கப்பட்டது. நவின தொழில்நுட்பங்களைப் பாவித்து தொலைபேசி அறிக்கைகள் பெறுதல், பகுப்பாய்வு செய்தல், CCTV காட்சிகள் பெறுதல், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மூலம் வாகனங்களை அடையாளம் காணுதல், நீதிமன்ற உத்தரவுபடி வங்கி முறைமூலம் குற்றவாளிகள் சட்டவிரோதமாக பணம் வசூலிப்பதை கண்டறிந்து, குற்றத்தைத் தடுக்கும் பணிகளைப் பொலிஸார் செய்து வருகின்றனர். இரகசியப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குற்றவாளிகளை கண்காணித்து (Surveillance) அவர்களுடைய செயற்பாடுகளையும் அவதானிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொள்ளையடித்தலை தடுப்பதற்காக திடீர் வீதித் தடைகளை உருவாக்கி விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் இருந்து குற்றவாளிகள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் வகையில் 24 மணி நேரமும் வீதித் தடைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சமூகப் பொலிஸ் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் கிராம அளவில் அமைக்கப்பட்டுள்ளன. சமூகப் பொலிஸ் குழுக்கள் மூலம் குற்றம், ஊழல், போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் தடுக்கப்படுகின்றனர். கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் மதுபானம் மற்றும் போதைக்கு அடிமையாகும் அபாயத்தில் உள்ளோரை அடையாளம் காணவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பாதுகாப்பற்ற சூழலை மாற்றவும் தேவையான கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செய்யப்படுகிறது.

மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் மூலம் சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்காக ஆண், பெண் பொலிஸ் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி வருகின்றனர்.

குழந்தைகளின் பாதுகாப்பில் கவனிக்க வேண்டிய விடயம் பெற்றோரின் அன்பு. குழந்தைகளுக்கு இது மிகவும் அவசியம். குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் கவனிப்பு மிகவும் அவசியம். பெற்றோரின் அன்பைப் பெறாத பிள்ளைகள் வேறு வழியில் அதனைத் தேடுகின்றனர். அப்போது பிள்ளைகள் சீரழிக்கப்படுகின்றனர், 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோக வழக்குகளின் சமீபத்திய ஆய்வில், 75% வழக்குகளில், அந்தக் குழந்தைகள் தங்கள் பெற்றோரின் அரவணைப்பையும் அன்பையும் இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். அனைத்து பெற்றோரும் தங்கள் குழந்தைகள் பாதுகாப்பான குடும்பச் சூழலில் வளர்க்கப்படுவதை உறுதி செய்யவேண்டும்.

பாடசாலைகளில் குழந்தைகளின் பாதுகாப்புக்காக நான் வட்ஸப், வைபர் குழுவை அறிமுகப்படுத்தியுள்ளேன், மேலும் ஆசிரியர்களும் தங்கள் குழந்தைகளின் பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தவேண்டும். அது அவர்களின் பொறுப்பும் கூட. பொலிஸ் நிலைய அளவில், பொலிஸ் பிரிவுகளுக்குள் உள்ள பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், போதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் தடுப்பு, பிள்ளைகள் மீதான பாலியல் துன்புறுத்தல், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுவது குறித்து விழிப்புணர்வு விரிவுரைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக அனைத்து பெற்றோரையும் இதில் பங்கேற்குமாறும் அது தொடர்பாக நான் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தி உள்ளேன்.

**கே: யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாதவகையில் இப்போது தான் போதைப்பொருள் பாவனையால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது. போதைப்பொருள் பாவனையாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். ஆனால் போதைப் பொருளை விற்பனை செய்பவர்கள், முகவர்கள் குறைந்தளவிலேயே கைது செய்யப்படுகின்றனர். அதைவிட இந்தப் போதை விற்பனைக் கும்பல்களின் சூத்திரதாரிகள் கைது செய்யப்படுவதில்லை என்றும் மக்களிடையே பொதுவான குற்றச்சாட்டு உண்டு. அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

ப: யாழ். மாவட்டத்தில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் போதைப்பொருள் அதிகரிப்புப் போக்கு காணப்படவில்லை. கடந்த காலங்களில் இரண்டு பெண்கள் உள்ளிட்ட பல போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக இந்த போதைப்பொருள் கடத்தல் என்பது மிகவும் பரந்த அளவில் செயற்படும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தலாகும். இதற்கு எதிராக போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல், கைதுசெய்தல் , புனர்வாழ்வளித்தல் (Prevention, Detection, Rehabilitation) ஆகிய 03 விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. குறிப்பாக கேரளக் கஞ்சா கடல் மார்க்கமாக வடமாகாணத்துக்கு வருவதுடன் சிறிலங்கா கடற்படையினருடன் இணைந்து கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடத்தல்காரர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஹெரோயின், ஐஸ் போன்ற போதைப் பொருள்கள் தென் பிராந்தியத்தில் இருந்து வடமாகாணத்துக்கு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவு, குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு (DCDB) இத்தகைய போதைக் கடத்தல்காரர்களைக் கைது செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறு கைது செய்யப்படும் கடத்தல்காரர்களின் தொலைபேசிப் பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் விசாரணைகளில் இருந்து தெரியவரும் தகவல்களின் அடிப்படையில், அந்தக் கடத்தல்காரர்களின் சூத்திரதாரிகளும் கைது செய்யப்படுகிறார்கள்.

**கே: சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப் பொருள் விடயத்தில் பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுகின்றது. குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு பொலிஸ் அதிகாரிகள் சிலர் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் என்றும் சொல்லப்படுகின்றது. இவ்வாறு குற்றச் செயல்களுக்கு பொலிஸார் துணை போவதாகச் சொல்லப்படுவது உண்மையா? அவ்வாறெனில் அத்தகைய குற்றங்களுக்கு உடந்தையாகச் செயற்படும் பொலிஸார் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா?**

ப: யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும், பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினராலும் சட்டவிரோத மணல் அகழ்வு, போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஏனைய சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கை மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. அதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஆதரவும் பெற்றுக் கொள்ளப்படுகிறது. இதில், பொலிஸ் உத்தியோகத்தர் யாராவது ஊழல் செயல்களை ஆதரித்தால் அல்லது இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால், அந்த உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும், சட்டத்தை அமுல்படுத்தவும் தயங்கமாட்டோம். அத்தகைய உத்தியோகத்தர்கள் மீது கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அத்தகைய உத்தியோகத்தர்கள் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால், அதை நேரடியாக எனது அலுவலகத்துக்கோ அல்லது எனக்கோ பொதுமக்கள் தயக்கமின்றி வழங்கினால், உரிய நடவடிக்கை எடுப்பேன்.

**கே: யாழ்ப்பாண நகரின் போக்குவரத்து நெரிசல் பற்றி பல தடவைகள் கூறப்பட்டன. போக்குவரத்து நெரிசலால், விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை அவதானிக்கமுடிகிறது. பொலிஸ் அதிகாரிகள் இதைப் பற்றி ஏன் கவலைப்படவில்லை? அதிக வேகத்தில் பயணிக்கும் மோட்டார்சைக்கிள்களின் (மோட்டார் சைக்கிள்கள்) வேகத்தைக் கட்டுப்படுத்தாமை, அதிக பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்காமை என்பவற்றை அவதானிக்க முடிகின்றது. இதேவேளை, போக்குவரத்தை கட்டுப்படுத்தும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொதுமக்களிடம் இலஞ்சம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறதே?**

ப: யாழ்.மாவட்டத்தின் படிப்படியான வளர்ச்சியுடன், குறிப்பாக யாழ். நகரம் மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் நிர்மாணிப்புப் பணிகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதால், நகரில் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது. அதிகளவாக யாழ்ப்பாண நகரில் இருபக்கமும் வாகனம் நிறுத்தி வைத்திருப்பது இதற்கு காரணமாகும். இதற்காகச் சாலைகளை ஒருவழிப்பாதையாக்குவது போன்ற சிறப்பு திட்டங்களை செயற்படுத்த வேண்டும். மேலும், CCTV கமரா அமைப்புகளால் நகரைக் கண்காணிக்க வேண்டும். 24 மணி நேரமும் கமராக்கள் மூலம் கண்காணிப்பதால் போக்குவரத்து நெரிசல் மற்றும் குற்றங்களைத் தடுக்கமுடியும். அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ் . மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் 75% வாகனங்கள் போக்குவரத்துச் சட்டங்கள் மட்டுமே மீறுவதாக அவதானிக்கப்படுகிறது. பயணிகள், பாதசாரிகள் மற்றும் ஓட்டுநர்கள் தமது சுய ஒழுக்கத்தைப் பேணுவது மிக அவசியம். இந்தப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கடமைகள் போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளால் மட்டும் செய்ய முடியாத ஒன்று. அதற்கு அனைவரின் ஆதரவும் தேவை. யாழ்.மாவட்டத்தில் பயண வசதிக்காக மோட்டார் சைக்கிள்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதுடன், இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பாதுகாப்புத் தலைக்கவசம் அணிவது மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. யாழ் .மாவட்டத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் இதுவரை காலமும் வாகன விபத்துகள் மற்றும் வழக்குகளின் தரவுகளின் அடிப்படையில் மதுபோதையில் வாகனம் செலுத்தியமை தொடர்பாக 1, 252 வழக்குகளும், போக்குவரத்து விதிகளை மீறியமை 3,746 வழக்குகளும், 55, 692 ஏனைய போக்குவரத்து குற்றங்களும், உயிரிழப்பு ஏற்படுத்திய 71 விபத்துகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. 103 பேருக்குப்பலத்த காயங்களும், 109 சிறு காயங்களும், 30 சொத்துச் சேதங்களும் பதிவாகியுள்ளன.

**யாழ்ப்பாண விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு (SCIB) க்கு இவ்வருடம் பண மோசடிகள் தொடர்பான 26 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் வெளிநாட்டு வேலை வழங்குவதாகக் கூறி பண மோசடிகள் தொடர்பான 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த மோசடிகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.**



இவ்விபத்துகளில் யாழ்ப்பாணத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற 19 பேர் இறந்துள்ளனர். அவர்களில் அதிகமானோர் 70 வயதுக்கு மேற்பட்டவர்கள். மேலும் வாகன விபத்துகளில் 40 மேற்பட்டவை மோட்டார்சைக்கிள் ஓட்டுநர்களின் தவறால் நிகழ்ந்துள்ளன.

குறிப்பாக பெற்றோர் தங்கள் அன்புக்குரிய குழந்தைகளை பாடசாலைக்கு ஏற்றி வரும்போதும் பாடசாலைவிட்டு அவர்களை ஏற்றிச் செல்லும்போது அந்தக் குழந்தைகளுக்கும் ஹெல்மெட் அணிய வேண்டும். ஆனால் தற்போது 60% ஆன குழந்தைகள் ஹெல்மெட் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. விபத்துகள் ஏற்பட்டால், பெற்றோர் தப்பிக்கின்றனர். ஆனால் ஹெல்மெட் அணியாததால் குழந்தைகளுக்குச் சேதம் ஏற்படுகிறது. யாழ்.மாநகரில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் கட்டடங்கள் மற்றும் கடைகளுக்கு முன்பாக நிறுத்துவதால், வீதிகள் மறைக்கப்படுகின்றன. பொதுமக்கள் இலகுவாக கடைகள் மற்றும் நிறுவனங்களுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அதற்கான பாதுகாப்பான வாகனநிறுத்துமிடங்கள் தேவை. அப்போது வாகனங்கள் அதற்குரிய இடத்தில் நிறுத்தி விட்டுத் தங்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியும். இது தொடர்பாக, அதிகாரிகளுடன் பல சுற்றுப் பேச்சு நடத்தியுள்ளேன்.

சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்தை கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த அதிகாரிகளில், ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் மிகக் குறைந்தளவில் காணப்படலாம். அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் தயங்கமாட்டேன். அதை நான் கண்டிப்பாகச் செய்வேன்.

**கே: என்னதான் சட்டங்கள் போட்டாலும் அவை சரியான வகையில் நடைமுறையாவதற்கு மக்களின் பங்களிப்பும் மிக அவசியம். அந்த வகையில் யாழ்ப்பாண மக்களிடம் நீங்கள் எவ்வகையான ஒத்துழைப்புகளை எதிர்பார்க்கிறீர்கள்?**

ப: பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும், பொதுமக்கள் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றி வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கும் பொது மக்களின் ஆதரவு இலங்கைப் பொலிஸாருக்கு மிகவும் முக்கியமானதாகும். இலங்கைப் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவின் ஊடாக இலங்கைப் பொலிஸாரின் இலக்குகளை அடைவதற்காக, கிராமஉத்தியோகத்தர்களின் களங்களை உள்ளடக்கும் வகையில் மாவட்டத்தில் கிராமஉத்தியோகத்தர்கள் மட்டத்தில் சமூகப் பொலிஸ் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. பொது மக்களின் அக்கறையையும் ஆதரவையும் பெற்று காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்தவும் பொலிஸ் நிலைய அளவில் உள்ளூர் ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்தக் குழுக்களின் ஊடாக கிராமஅலுவலர் களத்தில் உள்ள சமூகத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் கிராம அலுவலர் களத்தில் உள்ள மதத் தலைவர்களிடம் இருந்து பெறப்படுகிறது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் நான் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணி வருகின்றேன். குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள், ஊழல்கள், சமூக விரோதச் செயல்கள், போதைப்பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற விடயங்கள் தொடர்பில் தங்களுக்குத் தெரிந்த தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். மேலும், அது தொடர்பான தகவல்களை எனது அலுவலகத்தில் தெரிவிக்கலாம்.

**கே: யாழ்ப்பாணம் முற்றுமுழுதான தமிழ் மக்கள் வசிக்கும் ஒரு மாவட்டம். ஆனால் இங்குள்ள பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் சிங்கள மொழியிலேயே பதிவுசெய்யப்படுகின்றன. வீதிப்போக்குவரத்துப் பொலிஸாரும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத் துண்டு போன்றவற்றையும் சிங்களத்திலேயே எழுதுகின்றனர். மக்கள் முறைப்பாடு செய்யச் செல்லும் சில சந்தர்ப்பங்களில் தமிழ்ப் பொலிஸார் கடமையில் இல்லை எனக்கூறி மக்கள் திருப்பி அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. மொழி ரீதியான இந்த இடர்பாட்டை நிவர்த்தி செய்யமுடியாதா? அதிகளவு தமிழ்ப் பொலிஸாரை உள்ளீர்த்து இங்கே அவர்களுக்கு கடமையை வழங்கலாமே?**

ப: தற்போது யாழ்.மாவட்டம் முழுவதிலும் உள்ள பொலிஸ் நிலையங்களின் கடமைகளுக்காக தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள், மகளிர் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் பரிசோதகர் தர உத்தியோகத்தர்களை உள்வாங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, எதிர்காலத்தில் அதிகளவான தமிழ் உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட உள்ளனர்.

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊர்ப்புதினம்

பாகம் 2

○ இராகவன்

08

நல்ல ஆகிருதியான தோற்றத்தில வளர்த்திக்கேற்ற உடம்போட மெல்லிய நீலத்தில ட்றவுசரும், அதுக்கு மட்ச்சான கலரில கோடன் சேர்ட்டும், முழுக்கையில மணிக்கட்டுகள் தெரியிற மாதிரி ஒரு மடிப்பு மடிச்சுவிட்டு, முகமெல்லாம் பளபளக்கிற வகையில கிளீன்ஷேவெடுத்து, தடிச்ச சொண்டும் வெள்ளை வெளே ரெண்டு நீக்கல் பல்லுகளும் தனிச்சுத் தெரிய ஒரு கறுவலாள் வெளியில வந்தார். நான்தான் அவரை முதல்ல கண்டனான். உடன மெல்ல விலத்தி நல்ல பிள்ளை மாதிரி வகுப்புக்குள்ள வந்திட்டன்.

மற்றப்பொடியள் அவர் வெளியில வந்ததை முதல்ல கவனிக்கேல்ல. அதைத் தொடர்ந்து அவரின்ர கையில அகப்பட்ட ஆக்களுக்கெல்லாம் பொறிபறக்கிற மாதிரி கன்னத்தைப் பொத்தி வெளுவை விழுந்தது. முந்தி நீங்கள் ஓயெல் வகுப்பில தமிழ் இலக்கியப் பாடத்தில செய்னம்பு நாச்சியார் மான்மியம் படிச்சிருப்பியள். அதில செய்னம்பு நாச்சியாரப் பற்றிச் சொல்லேக்க 'அழுத பிள்ளையும் இம்மென்றடங்கும்' எண்டொரு வரி வருமெல்லோ? அது மாதிரித்தான் எங்கடை வகுப்பு அந்த நேரத்தில இம்மென்றடங்கிச்சுது. "ஒருத்தரும் இனி மூச்சுக்காட்டாமல் இருக்க வேணும். ஒரு சின்னச் சத்தம் கேட்டாலும் முழுப்பேருக்கும் நல்ல சாத்துப்படி விழும். புத்தகத்தை எடுத்துப் படியுங்கோடா" எண்டு உறுமிப் போட்டு அவர் திரும்பவும் அறைக்குள்ள போட்டார்.

அண்டைக்குத்தான் அவரை நான் நேரில கண்டேன். அதற்குப் பிறகு அவரைக் கண்டால் எனக்கு ஒரே கெதிக் கலக்கமாயிருக்கும். பிற்காலத்தில் அவரது மேதமையைக் கேள்விப்பட்டு வியப்பு மேலிட மெய்சிலிர்ப்புக்குள்ளாகினேன். அவர் வேறு யாருமல்லர். அண்மையில் காலமான சங்கீத வித்துவான் குமாரசுவாமிதான். நான் ஊர்ப்புதினத்தின் முதலாம் பாகத்துத் தொடக்க அத்தியாயங்களில் குறிப்பிட்ட சண்டியர்களின் ஊரான தெடுத்தனையில்தான் இவரும் பிறந்தார். ஊருக்குள்ளே இவரை வரதன் எனச் செல்லமாக அழைப்பார்கள்.



எனது நண்பர்களில் ஒருவரான பங்கயனின் மாமாதான், இந்த வரதன். அதாவது பங்கயனின் தாயாரது சொந்தத் தம்பி. கரவெட்டியின் புகழ்பூத்த பண்டிதர்களிலொருவரான கணபதிப்பிள்ளை இவரது தாய் மாமன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1991 நடுப்பகுதி என்பதாக நினைவு. இவர் எனது வீட்டுக்கு முன்பாகவுள்ள கனகராவளவுப் பரமானந்தப் பிள்ளையார் கோவிலில் ஓரிரவு தனியாளாக ஒரு சங்கீதக் கச்சேரி நிகழ்த்தியிருந்தார். அதற்கு தன்னுடன் விக்னேஸ்வராக் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்த ஆசிரிய,ஆசிரியைகளெல்லோரையும் அழைத்திருந்தார். எனது அப்பா இவரது சிறப்பை ஆதியோடந்தமாக அறிந்திருந்தார்.

அவர்தான் எனக்கு "வரதன் நல்ல சங்கீத ஞானமுள்ளவன். அண்ணாமலை யூனிவசிற்றியில் சீர்காழி கோவிந்தராஜனிட்ட சங்கீதம் படிச்சவன்.

இலங்கையில அவனைப் போல சங்கீதஞானமுள்ள ஒருத்தனையும் காணேலாது"எண்டெல்லாம் சொல்லியிருக்கிறார். இவரைப் பற்றி மிச்ச விசயங்களை அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)



# கண்ணாடி வீடு

சஞ்சீவி தொடர்கதை

○ ரஜிதா அரிச்சந்திரன்

8

எல்லாமே நல்லபடியாக நடப்பதை நினைத்து டொடாவுக்கு மகிழ்ச்சி.

"எல்லாரும் நல்லா இருப்போம் . அதுதான் எல்லாருக்கும் நல்லது." என்றாள் டொடா.

"சரி நான் வெளியில போயிட்டு வாறன்" என்று நகர முயன்றான் பிஸ்ரோ.

"ஏதாவது சாப்பிட்டுப்போவன் "

" இப்ப கேப்பாய் எல்லாம்" என தமக்கையைச் செல்லமாகக் கடிந்தான் பிஸ்ரோ அவன் சாப்பிட்டுவிட்டு வெளியே போனதும் ஷோபாவின் ரூமுக்குச் சென்றாள் டொடா

" சொறி ஷோபா, பிஸ்ரோ அப்படித்தான். மனதில பட்டதைக் கேட்டுடுவான்."

" இல்லை அண்ணி. இதில எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை ஆனால் என்ர நிலைமை உங்களுக்கே தெரியும் தானே?" என்று ஷோபா சொன்னாள்.

"ஷோபா ஒன்றை விளங்கிக் கொள் உங்கட அம்மா அப்பாவுடன் நல்ல சந்தோசமா இருந்தவா. அவர் திடீரென்று இறந்ததும் அவவுக்கு ஒரு அன்பு தேவைப்பட்டிருக்கும். அந்த ஆள் அந்த நிலையை தனக்குச் சாதகமா மாத்திட்டான்."

"என்ன அண்ணி சொல்லுறியள்? அப்பாவுக்கும் எனக்கும் அவா துரோகம் பண்ணிட்டா. அவவின்ர உடம்பாசையால என்ர வாழ்க்கை கெடப் பார்த்தது. நான் கொஞ்சம் விவரமா இருந்தபடியால் தப்பிச்சன். இல்லாட்டி நானும் சீரழிஞ்சிருப்பன்" என்று சொல்லிக் கொண்டே அழுத ஷோபாவை அணைத்து டொடா ஆறுதல் சொன்னாள். அவளின் ஆறுதலில் ஓரளவுக்கு மனநிறைவை அடைந்தாள் ஷோபா.

சற்றைக்கெல்லாம், "சரி ஷோபா ,சமையல் அறையில் கொஞ்சம் வேலை இருக்கு வாறன். இதைப்பற்றிப் பிறகு கதைப்போம் " என்று மெல்லக் கிளம்பினாள் டொடா.

அவள் போனதும், இளையராஜாவின் பாடல்களை ஒலிக்க விட்டபடி, தூங்கிப்போனாள் ஷோபா. ஆனால் கனவொன்று அவளைத் தூக்கத்தில் துரத்தியது. ஷோபா கடலுக்குள் இறங்கி அப்படியே மூழ்கச் செல்கிறாள். அப்போது போலவும் ஒரு கப்பல் அவளை ஏற்றிச் செல்கிறது. அது கடலின் ஆழ்பரப்பு. அந்த ஆழ்கடல்பரப்பு கருநீல நிறம். அவளால் மூச்சுவிட முடியவில்லை. அந்த நீலநிறம் அவளை விழுங்குவதைப் போல வந்தது.

"ஐ...யோ.......!"

வீரிட்டபடி தூக்கத்தில் இருந்து எழுந்தாள் ஷோபா. அவளின் அலறலில் வீட்டில் உள்ள அத்தனைபேரும் பயந்தே போய்விட்டனர். பின்னர் கனவென்று புரிந்து, இயல்புக்கு வந்தாலும் கூட , 'பிஸ்ரோ ஷோபாவை இப்படிக் கேட்டதால் தான் அவள் இப்படியெல்லாம் பயங்கரக் கனவு காணுகிறாள்' என்று பிஸ்ரோ மீது அருணுக்கு ஆத்திரம் வந்தது. ஆனாலும் அவன் அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை. நல்லவேளையாக அப்போது பிஸ்ரோ அங்கிருக்கவில்லை. இல்லாவிட்டால் நிச்சயமாக ஒரு ரணகளம் நடந்திருக்கும். மாலையில் தான் பிஸ்ரோ வந்தான். டொடா அவனிடம் நடந்ததைச் சொன்னாள். அவன் தவித்துப் போனான். உடனேயே ஷோபாவிடம் சென்று

"ஐ ஆம் வெறி சொறி ஷோபா. என்னால தான் உங்களுக்கு இப்படி ஆகிட்டுது " என்று வருத்தத்தோடு சொன்னான்.

"இல்லை பிஸ்ரோ . உங்கட பிழை ஒன்றும் இல்லை. நீங்கள் உங்கள் மனதில் தோன்றினதைத் தானே கேட்டனீங்கள். எனக்குத்தான் ஒன்றும் செய்யமுடியாத நிலை. நாங்கள் நல்ல நண்பர்களாகப் பழகமுடியும். பழகுவோம் பிறகு காலம் பதில் சொல்லும் தானே" என்று நிலைமையை இயல்பாக்க முனைந்தாள் ஷோபா.



"சரிஷோபா, அப்படியேசெய்வோம்" மலர்ச்சியோடு அவளின் கைகளைப் பற்றிக் குலுக்கிவிட்டு நகர்ந்தான் பிஸ்ரோ.

☯ ☯ ☯ ☯

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக வளாகத்தில் சோடியாகத் திரியும் மாணவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள் ஷோபா.

"எங்கட ஊரில எண்ட அவனோட திரியாதை, இவையோட சேராதை எண்டு ஆயிரம் கட்டுப்பாடுகள். இஞ்ச அவையவை தங்கட மனதுக்குப் பிடிச்சவையோட பழகலாம்" என எண்ணிக்கொண்டவளை, அசோக்கின் குரல் நனவுலகுக்கு வரவைத்தது. "என்ன ஷோபா கடும் சிந்தனையில் இருக்கிறாய்? என்ன பிரச்சினை? "

"ஒண்டுமில்லையே"

"பொய் சொல்லாதே நீ "

"இல்லை அசோக். ஒன்றும் இல்லை."

"சரி விடு என்னிடம் சொல்ல விருப்பம் இல்லாட்டா பரவாயில்லை" என்று முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டான்.

"டொடா அண்ணியிட தம்பி பிஸ்ரோ என்னை விரும்புறானாம். ஆனால் எனக்கு எந்த ஐடியாவும் இல்லை. அவன் தான்.." இழுத்தாள் ஷோபா. அசோக் புன்னகைத்தான்.

"இதற்கு ஏன் குழம்ப வேண்டும்? பிஸ்ரோவை ஓக்கே பண்ணுறதில உனக்கு என்ன பிரச்சினை? அவன் நல்லவன் எண்டால் அவனைக் கட்டுறதில பிழையே இல்லை. நான் சொல்றதைச் சொல்லிட்டன் . ஆனால் இது உன்ர வாழ்க்கை,. நீதான் முடிவெடுக்கவேணும்" ஒரு நண்பனாகப் பக்குவமாகச் சொன்னான் அசோக். அவன் சொன்னதைக் கேட்டதும் தெளிவடைவதற்குப் பதிலாக, ஷோபாவின் மனம் இன்னும் குழப்பமடைந்தது. அந்தக் குழப்பத்தோடு வீடு வந்தவள், எதேச்சையாக தொலைக்காட்சியில் போய்க்கொண்டிருந்த செய்தியைப் பார்த்தாள். 'யாழ். சிறையில் கலவரம், பெண் கைதி காயம்' என்ற செய்தியோடு ஆனந்தியின் புகைப்படத்தையும் காட்டிக் கொண்டிருந்தார்கள். அவ்வளவுதான்.

"அம்மா!!"

கத்திகொண்டே அடியற்ற மரமாக சாய்ந்தாள், அவளைக் கீழே விழவிடாமல் ஓடிவந்து தாங்கிக் கொண்டான் பிஸ்ரோ.


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்

ர.சிவஜனனி,
தரம் - 6
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




மு.பிரணவி
தரம் -7F
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை




நெ.பிரியங்கன்
தரம் - 2
இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை






கி . விஸ்னுப்பிரியன்
மன்/சித்தி விநாயகர் இந்து கல்லூரி



சு.மதுசாயினி,
தரம் -9 D

## விடுகதைகள்

1. மண்ணுக்குள் கிடப்பவன்
மங்களகரமானவன்
அவன் யார்?

மஞ்சள்

2. இவன் வாலுக்கு
வையகமே நடுங்கும்
அவன் யார்?

தேள்

3.பல் துவக்காதவனுக்கு
உடம்பு எல்லாம் பற்கள்?

சீப்பு

4.ஊரெல்லாம் ஒரே விளக்கு.
அதற்கு ஒரு நாள் ஓய்வு அது
என்ன?

நிலா

5. முத்து வீட்டுக்குள்ளே
தட்டுப் பலகை
அது என்ன?

நாக்கு

# யாழ்.மாவட்டத்தில்...

(சஞ்சீவி 3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் தமிழில் முறைப்பாடுகளைப் பதிவு செய்து விளக்கமளிக்கக்கூடிய அதிகாரிகள் உள்ளனர். போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர்களால் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் போது, சிங்களத்தைக் கையாளக்கூடிய சாரதிகளுக்குத் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் சிங்களமொழியிலும், தமிழை மாத்திரம் கையாளக்கூடிய சாரதிகளுக்கு தமிழிலும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் தமிழ்மொழி பயிற்சிநெறிகளுக்கு பரிந்துரைக்கப்படுகின்றனர். அதன்படி, எதிர்காலத்தில் அனைத்து ஆண், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களும் தமிழில் கடமையாற்ற முடியும் என நான் நம்புகிறேன்.

**கே: சமீபகாலமாக வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புவதாகக் கூறி பணமோசடி நடக்கிறது. மேலும் யாழ். மாவட்டத்தில் நில மோசடியும் அதிகம். இந்த மோசடிகளைத் தடுக்க என்ன வழி?**

**ப:** யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிலர் சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்ல முயல்வதுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு பெருமளவு பணத்தை வழங்கி இந்த மோசடிகளில் சிக்கியுள்ளனர். இதனடிப்படையில், யாழ்ப்பாண விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவு (SCIB) க்கு இவ்வருடம் பண மோசடிகள் தொடர்பான 26 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் வெளிநாட்டு வேலை வழங்குவதாகக் கூறி பண மோசடிகள் தொடர்பான 16 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதுவரை தொடர்பு இல்லாத அல்லது தெரியாத நபர்களின் வங்கிக் கணக்குகளில் பெரிய அளவிலான பணத்தை வைப்புச் செய்தல், குறிப்பாக வேலை நிமித்தமாக வெளிநாடு செல்வதற்காக, சிலர் தங்களுக்குத் தெரியாத நபர்களுக்கு அதிக அளவில் பணம் கொடுத்ததாகத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறு பணம் கொடுக்கும் மோசடியில் சிக்கியமை தெரிந்தும், அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆதாரங்க்ள் இல்லாததால், இந்த மோசடிகள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதில் சிரமம் ஏற்படுகிறது.

மேலும், வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடும்போது, பணம் வைப்பதற்கான காரணத்தைக் குறிப்பிடாமல், வேறு காரணத்தை குறிப்பிடுவதால் இந்த முறைப்பாடுகளுக்குரிய வழக்கு நடவடிக்கையை நடத்திச் செல்வது கடினமாக உள்ளது. சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்கள் மூலம் முறையான விசாரணையின்றி வேறு நபர்களுக்கு பணம் வைப்பிலிடுதல் அல்லது கொடுத்தல் போன்ற குற்றச் செயல்கள் தொடர்பில் இந்த வருடம் ஜனவரி 01ஆம் திகதி முதல் இன்று வரையில் யாழ். விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு 13 சந்தேக நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் காணி மோசடிகள் தொடர்பிலும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன், இது தொடர்பில் யாழ். விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிக்கையிட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இந்த முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக, எந்தவொரு நிலத்தையும் கையகப்படுத்துவதற்கு முன், உறுதி மற்றும் நிலம் தொடர்பான ஆவணங்கள் போன்ற ஆவணங்களை நிலப் பதிவாளர் அலுவலகத்தில் பெற வேண்டும். மேலும் நிலத்தை வாங்குபவர் அல்லது நிலம் தொடர்பான அறிவு உள்ள ஒருவர் அது தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்து அதன் உண்மைதன்மையை அறிந்த பின்னரே காணி பாரமளிக்கப்பட வேண்டும்.


வெளிநாட்டில் உள்ளவர்கள் நிலம் வாங்கும்போது, தாங்கள் வாங்கும் நிலம், பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் உள்ள நிலமா என்பதை உறுதி செய்த பிறகே, சட்டப்படி நிலத்தை வாங்குதல் வேண்டும். சமூக வலைதளங்களில் வரும் போலி விளம் பரங்களை நம்பி அதிக பணம் செலவழித்து நிலத்தைப் பெறுவது நல்லதல்ல.

சில நிலத் தரகர்கள் தங்கள் அதிகாரத்தின் கீழ் உள்ள நொத்தாரிசுகளைப் பயன்படுத்தி, அவர்கள் மூலம் நிலம் வாங்குபவர்களை ஏமாற்றி, தங்கள் சொந்த கையொப்பமிடப்பட்ட பத்திரங்களைச் சமர்ப்பித்து பதிவு செய்துள்ளனர். உதாரணமாக, உறுதிப் பத்திரத்தில் விவசாய நிலம் என குறிப்பிடப்பட்டுள்ள பத்திரம் தொடர்பான நிலத்தை விற்பனை செய்தபோது, மேட்டு நிலமாக பத்திரம் தயாரித்து மோசடி செய்து விற்பனை செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நிலத்தின் அளவும் மாறுகிறது. அதேபோல், மோசடியாக உருவாக்கப்பட்ட பத்திரம் தொடர்பான நிலம் இல்லாமல், மற்ற நிலங்களைக் காட்டி மோசடி செய்து விற்பனை செய்கின்றனர். பல்வேறு தரப்பு மக்களும் இதுபோன்ற காணி மோசடியில் ஈடுபட்டு வருகின்றனர். நிலம் வாங்குபவர்கள், நிலம் வாங்கும் போது இதுபோன்ற விஷயங்களைத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

போலிப் பத்திரங்களைத் தயாரித்து காணி மோசடி செய்தமை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் 13 சந்தேகநபர்களை இவ்வருட ஆரம்பத்திலிருந்து கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் மக்களின் உயிர் மற்றும் உடமைகளைப் பாதுகாப்பதற்காவும், மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்காகவும் இலங்கை பொலிஸார் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வி மறுசீரமைப்பு யாருக்கானது?

குருமன்காட்டாள் வன்னிகா

அண்மையில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியிருந்தன. வழமைபோல 3'ஏ' சித்திகள் பெற்ற மாணவர்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் பெற்றனர். இத்துடன் இணைந்த எழுதப்படாத விதியாக பல்கலைக்கழகக் கல்வி, தொழில் வாய்ப்புகள் முதலியவற்றுடன் மாணவர்களின் எதிர்காலத்தையே இந்தப் பரீட்சை ஒன்றுதான் தீர்மானிக்கிறது எனும் 'மாயத்தோற்றம்' ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், இலங்கையின் இன்றைய யதார்த்த நிலைமை அதுவல்ல. இதனை, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்தகூட பகிரங்கமாக ஏற்றிருக்கின்றார்.

கல்வி, அறிவு உருவாக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையே கடுமையான இடைவெளி நிலவுகிறது. அறிவு சார்ந்த பொருளாதாரத்தில் நாம் நுழைந்திருந்தாலும், படித்தவர்களின் பொருளாதாரப் பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்திலேயே உள்ளது. அத்துடன், கல்வி கற்றவர்கள் பெரும்பாலும் வேலையில்லாமல் அல்லது தம் திறமைசாரா வேலைவாய்ப்பில் இணைந்திருப்பதோடு, நாட்டின் பொருளாதாரமானது பாடசாலை இடைவிலகியோரின் உழைப்பிலும் வியர்வையிலும் நிலைகொண்டுள்ளது என்று பகிரங்கமாக ஏற்றிருக்கின்றார் அவர்.

கல்வியுமைச்சு, தேசிய விஞ்ஞான அமைப்பு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியன 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி கொழும்பிலுள்ள றோயல் கல்லூரியில் ஒரு நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தன. நிகழ்வில் கலந்துகொண்ட கல்வியமைச்சர் சுசில், 2024இலிருந்து STEAM கல்வியை (விஞ்ஞானம் S, தொழில்நுட்பம் T, பொறியியல் E, கலை A, கணிதம் M) அறிமுகப்படுத்துவதன் மூலம் அரசாங்கமானது இலங்கையின் கல்வி அமைப்பை மாற்றியமைக்கப்போவதாகக் கூறினார்.

இதற்கு முன்னர் தேசிய விஞ்ஞான அமைப்பை மையப்புள்ளியாக நியமித்து, அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட STEMI விஞ்ஞானம் S, தொழில்நுட்பம் T, பொறியியல் E, கணிதம்M ) விட இது வித்தியாசமானது. இது 2000களில் அமெரிக்காவில் அமெரிக்காவின் ஆற்றலைப் பதிவுசெய்தல் என்ற கூட்டணியின் வட்டமேசை மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இந்தக் கூட்டணியானது 21ஆம் நூற்றாண்டின் வணிகப்போட்டியை அமெரிக்கா வெல்லும் வகையில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள விஞ்ஞானிகளையும் பொறியியலாளர்களையும் உருவாக்குவதற்காக கூட்டணியாக இணைந்துள்ள பெருமுதலாளிகளின் அமைப்பாகும். 2007க்குப் பின்னர் அமெரிக்காவின் தேசிய ஆய்வு மையமானது தனது ஆய்வு நிகழ்ச்சிநிரலில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை வரவேற்று ஊக்கமளித்தது. அரசாங்கமும் பெருநிறுவனங்களும் கல்வியை நோக்கி கவனத்தைக் குவித்ததால் அதற்கான நிதியுதவிகள் குவிந்த அதேவேளை கலை மற்றும் அது சார்ந்த கல்வியானது சிக்கல்களை முகங்கொடுக்க நேர்ந்ததோடு சமநிலையற்ற நிலை உருவாகியது என்பதை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கல்வியாளர் கலாநிதி சுதேஷ் மந்திலக்க சுட்டிக்காட்டியிருக்கிறார். இந்தச்சூழ்நிலையில், அமெரிக்க கலை மற்றும் விஞ்ஞானக் கழகமானது, சமூகக்கல்வி மற்றும் மானிடவியல் கல்வியில் காணப்படும் ஈடுபாட்டை அடிப்படையாகக் கொண்டு 2013ஆம் ஆண்டு 'விடயத்தின் மையப்புள்ளி' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.


சமூகரீதியான நன்மைகள் தனிப்பட விஞ்ஞானக் கல்வியால் மட்டுமே அடைய முடியாது என்று நிறுவியது. அதன் பின்னர், 2013ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் உட்பட ஆய்வுக்குழுக்களும் கல்வியியலாளர்களும் STEM கல்வியில் 'கலை' இணைக்கப்படவேண்டும் என்பதை வற்புறுத்திக்கூறினர். இதன் விளைவாக STEAM கல்வி STEMI என்பதாக இடம்மாறியது. இருந்தும் இம்மாற்றம் இலங்கையில் மிக அண்மையிலேயே கொண்டுவரப்பட்டுள்ளது.

### இலங்கையின் கல்விமுறையில் ஆக்கபூர்வ மாற்றம் சாத்தியமா?

கல்வியமைச்சர் எமது நாட்டின் கல்வி அமைப்பை மாற்றுவதற்காக உடனடிப் பொதியொன்றை அறிமுகப்படுத்தியிருக்கின்றார். பெருநிறுவனங்கள் வளர்ச்சியை கருத்திற்கொண்டு மேற்கொள்ளும் உடனடி அணுகுமுறைகளைப் போல, துரித உணவுகளைப் போல புதிய STEAM முயற்சியும் உடனடியான, உற்பத்திகளை (மாணவர்களை) கல்வி மூலம் கொண்டுவர எத்தனிக்கின்றது. அரசாங்கமானது STEAM கல்வி STEMI விட எவ்வளவு தூரம் பயன்மிக்கது அல்லது STEM கல்வி எதிர்பார்த்த விளைவுகளை அளித்துவிட்டதா போன்ற எவ்வித கலந்துரையாடல்களுமின்றி வெறுமனே ஓர் எழுத்தை மாத்திரம் இணைத்து விட்டு இத்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது என்றும் கலாநிதி சுதேஷ் மந்திலக்க கடந்த ஏப்ரலில் சுட்டிக்காட்டியிருந்தார்.

எந்தவொரு கொள்கைகளும் முன்மொழிவுகளும் இலங்கையில் காணப்படும் சமூகபொருளாதார கலாசார வித்தியாசங்களை, ஏற்றத்தாழ்வுகளை கவனத்திலெடுக்காமல் உருவாக்கப்படவேமுடியாது. கல்விக் கொள்கைகளைப் பொறுத்தவரையில், சமூக பொருளாதார கலாசார வித்தியாசங்கள் பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். கொழும்பில் காணப்படும் நகர்ப்புறப் பாடசாலைகளை நியமங்களாகக் கொள்ளமுடியாது. அந்த அணுகுமுறையானது அனைத்துப் பாடசாலைகளும் விஞ்ஞானக் கல்வியைக் கற்பிக்கக்கூடிய வளங்களோடு இருக்குமென்ற கருதுகோளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். இலங்கையில் காணப்படும் பின்தங்கிய கிராமப்புறப் பாடசாலைகளில், எத்தனை விஞ்ஞானக்கல்வியை கற்பிக்கும் இயலுமையில் இருக்கின்றன?

உயர்தரத்தில் விஞ்ஞானக்கல்வியை தொடரக்கூடிய வளங்களை பாடசாலைகள் வழங்க இயலாமல் இருப்பதனால் எத்தனை மலையக மாணவர்கள், வன்னிப் பெருநிலத்தின் மாணவர்கள், வலிகாமம், தீவகம் போன்ற கல்வி வலயங்களின் மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவு செய்கின்றார்கள்? இதற்கான தீர்வாக கல்விக்கான நிதியொதுக்கீட்டை அதிகரிப்பதோடு சமூகரீதியில் சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் ஒதுக்கீட்டை பகிர அரசாங்கம் முன்வருமா? விஞ்ஞானத்துறை மற்றும் கலைத்துறையை ஒருங்கிணைத்து வழங்கப்படக்கூடிய புதிய பாடங்களை அறிமுகப்படுத்தத் தயாராகுமா? STEAM கல்வி முறைக்கு வெறுமனே ஒரு கருவியாக கலைத்துறை பாவிக்கப்படுவதை விடுத்து விஞ்ஞானம் கலைத்துறையிலும் கலைத்துறை விஞ்ஞானத்திலும் ஒன்றுக்கொன்று இணைந்து கற்பிக்கப்படத்தக்க வகையிலான பல்துறை அணுகுமுறையை அறிமுகப்படுத்த வேண்டும். கல்வியியலாளர்கள் வலியுறுத்துவதும் அதையே. ■



# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

### 1948 ஜனவரி 24

நயினை மணிபல்லவக் கழகத்தினால் பெரிய கடை மைதானத்தில் தேசியக்கொடி சம்பந்தமாக கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய பூபாலசிங்கம் தேசியக்கொடியை தமிழர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

### 1948 ஜனவரி 27

தேசியக்கொடி அமைப்பதற்கு குழுவொன்று பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவினால் நியமிக்கப்பட்டது. இந்தக்குழுவில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி, பண்டாரநாயக்கா.சேர்.ஜோன்.கொத்தலாவலை.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா.ஜீ.ஜீ.பொன்னம்பலம்,எஸ்.நடேசன்,ரி.பி.ஜாயா,எஸ்.ராஜபக்ச ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். தேசியக்கொடி தயாரிக்கப்படும் வரை பிரிட்டனின் யூனியன் ஜக் கொடியோ சிங்கக்கொடியோ விரும்பியபடி பறக்க விடலாம் என பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா அறிவித்தார்.

### 1948 பெப்ரவரி

சேர்.பொன்.இராமநாதன் நாட்டுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் முகமாக நாடாளுமன்ற வாசலில் உள்ள இராமநாதனின் சிலைக்குக்கீழே வைத்து சேர்.ஒலிவர் குணாதிலக சுதந்திர உடன்படிக்கையை வாசித்து டி.எஸ்ஸிடம் கையளித்தார். பிரிட்டனின் யூனியன் ஜக் கொடி இறக்கப்பட்டு வாளேந்திய சிங்கக்கொடி ஏற்றப்பட்டது. தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் சுதந்திரதின நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோதும் தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவரும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் தமிழர் பகுதியில், யாழ்ப்பாணத்தில் இருந்த ஒரு சில சிங்களக் கடைகளிலேயே சிங்கக்கொடி ஏற்றப்பட்டது. ஏனைய கடைகளிலும், பொது இடங்களிலும் கறுப்புக்கொடியே அன்றைக்குப் பறக்கவிடப்பட்டது. இது சிங்கக்கொடிக்கு எதிர்ப்பா? அல்லது சிலநாள்களுக்கு முன்னர் மரணித்த மகாத்மா காந்திக்கான துக்கத்தை அனுஷ்டிக்கக் கட்டப்பட்ட கறுப்புக்கொடிகளா என்று அனுமானிக்க முடியவில்லை.

இறுதியாக தீ திரைப்படத்தில் இடம் பெற்ற பாடலுடன் இந்த 1505-1948 காலப்பகுதிக்கான யாழ்ப்பாண வரலாற்றை நிறைவு செய்யலாமென நினைக்கிறேன்.

*'சுப்பண்ணா சொன்னாரண்ணா சுதந்திரம் வந்ததென்னு*
*எப்பண்ணா வந்ததென்னு எனக்கும் தெரியலேண்ணா*
*அப்பண்ணா நாம இன்னும் அடிமைகள் தானா அண்ணா?'*

(விரைவில் இந்த யாழ்ப்பாண வரலாற்றுத்தொடரை நூலுருவில் வெளியிட திட்டமிட்டுள்ளேன். வாசகர்களின் ஆதரவை எதிர்பார்க்கிறேன்)

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org